# மன்னா

"நற்செய்தியை அறிவிக்கவே கிறிஸ்து என்னை அனுப்பினார்" (1கொரி 1:17)

விலை ரூபா 12.00

பொழிவு 15 | ஐப்பசி, 2002 | (தனிச் சுற்றுக்கு மட்டும்) | குவிப்பு 88

மன்னார் மறை மாவட்ட வெளியீடு / PUBLISHED BY THE DIOCESE OF MANNAR


# செபமாலை ஆண்டும் செபமாலையில் புதிய 5 மறை நிகழ்ச்சிகளும்

## திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பரின் புதிய பிரகடனங்கள்

திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் 2002 ஐப்பசி தொடக்கம் 2003 ஐப்பசி வரையிலான ஒரு வருட காலப்பகுதியை செபமாலை ஆண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ளார். அத்துடன் செபமாலையில் 5 புதிய மறைநிகழ்ச்சிகளைச் சேர்த்துக்கொள்ளுமாறும் இறைமக்களைப் பணித்துள்ளார். இந்த புதிய 5 மறைநிகழ்ச்சிகளையும் "ஒளியின் மறை நிகழ்ச்சிகள்" (The Mysteries of light) எனத் திருத்தந்தை அழைக்கின்றார். இந்த மறைநிகழ்ச்சிகளை வாரம்தோறும் வியாழக்கிழமைகளில் தியானித்து செபமாலை செபிக்கும்படி அறிவுறுத்தியுள்ளார்.

இந்த ஒளியின் மறைநிகழ்ச்சிகளாவன, 1. இயேசு யோர்தானில் திருமுழுக்கு பெற்றது. 2. கானாவூர்த் திருமணக் கொண்டாட்டத்தில் இயேசு தன்னை வெளிப்படுத்தியது. 3. மனம் திரும்பும்படியான அழைப்போடு இறையரசைப்பற்றி இயேசு முழக்கம் செய்தது 4. இயேசு மறுரூபமானது. 5. பாஸ்கா மறைநிகழ்ச்சியின் வெளிப்பாடாக இயேசு நற்கருணையை ஏற்படுத்தியது என்பனவாகும்.

(தொடர்ச்சி 11ம் பக்கம்)



## சர்வதேச சிறுவர் தின விழா!

## மன்னார் சிறுவர்கள் யாழ்ப்பாணத்தில்





சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு யாழ். பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் நடைபெற்ற சிறுவர்கள் ஒன்று கூடலில் பங்கேற்ற மன்னார் மாணவர்களே இவர்கள். தென்னிலங்கையிலிருந்தும், மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மாவட்டங்களிலிருந்தும் 160க்கும் மேற்பட்ட பௌத்த, இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ மாணவர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். தியானம், சமாதானத்தை முன்னெடுக்கும் வழிமுறைகள், நட்புறவு, தொடர்பாடல், புரிந்து கொள்ளல், ஒத்துழைப்பு ஆகிய அம்சங்களில் விளக்கம் அளிக்கப்பட்டுக் கலந்துரையாடல் மூலம் ஆய்வரங்கு நடைபெற்றது. வாழ்வுதயத்தின் சமாதான இணைப்பாளர் திரு எ. அந்தோனிமுத்து அவர்களும் பத்து மாணவர்களும் மன்னாரில் இருந்து மேற்படி நிகழ்வில் பங்கேற்றனர்.

## மன்னா பத்திரிகைக்கு 5 வயது

மன்னா பத்திரிகை இவ்வருடம் ஐப்பசி மாதத்துடன் 5 வருடங்களை நிறைவு செய்கின்றது. 1984 ஆம் ஆண்டு தொடக்கம் சஞ்சிகை வடிவத்தில் வெளிவந்த மன்னா 1997 ஆம் ஆண்டு ஐப்பசி மாதத்தில் இருந்து முதன் முதலாக பத்திரிகை வடிவத்தில் வெளிவரத் தொடங்கி, இவ்வருடம் தனது 5 வருடங்களை பத்திரிகை வடிவில் நிறைவு செய்கின்றது. இதையொட்டி மார்கழி மாத மன்னா 5வருட நிறைவுச் சிறப்பிதழாகவும் கிறிஸ்மஸ் சிறப்பிதழாகவும் வெளிவரவுள்ளது.

## நெதர்லாந்து ஆயரின் அதிரடிச் செயல்

## விளைவு ....... திருச்சபையில் இருந்து விலக்கப்பட்டார்

கடந்த ஆனி மாதம் 29ம் திகதி நெதர்லாந்தின் கத்தோலிக்க பிரிவினைவாதக் குழுவின் தலைவர் ஆயர் றொமோலோ அந்தோனி 6 பெண்களை திருச்சபைச் சட்டத்தை மீறி குருக்களாகத் திருநிலைப்படுத்தினார். இந்நிகழ்ச்சியைக் கண்டித்து ஆடி 10ம் திகதி வத்திக்கானில் உள்ள விசுவாச மறைக்கோட்பாட்டு பேராயத்தின் தலைவர் கருதினால் றட்சிஞ்ச வெளியிட்ட அறிக்கையில் 6 பெண்களும் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றும் இவர்களைக் குருக்களாகத் திருநிலைப்படுத்திய ஆயர் றொமோலோவும் ஜீலை 22ம் திகதிக்கு முன்னர் மன்னிப்புக்கேட்டு திருச்சபைக்கு திரும்பி வரவேண்டும் எனக் கால அவகாசம் கொடுத்திருந்தார். இவர்களில் எவரும் மன்னிப்புக் கேட்காததால் திருச்சபை சட்டம் 1335ன்படி ஆகஸ்ட் 5ந் திகதி முதல் இவர்கள் அனைவரும் திருச்சபையில் இருந்து விலக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டனர்.

## வாழ்வுதயத்தின் 'உதவிக்கரம்' பிரிவின் 100வது கால் பொருத்தும் வைபவம்

**100** வது கால் பொருத்தப்பெற்ற நபரின் நாதஸ்வரக்கச்சேரி!

கால் பொருத்தப்பட்டவர்களின் கலை நிகழ்வுகள்!



விழாவின் பிரதம அதிதி மேதகு மன்னார் ஆயர் அவர்கள் 100 வது நபருக்கு செயற்கைக் காலை பொருத்துகிறார். அருகே ஆசிரியர் திரு டேவிட் அவர்கள்.

மன்னார் மறைமாவட்டத்தின் சமூக பொருளாதார மனித முன்னேற்ற நிறுவனமான வாழ்வுதயத்தின் உதவிக்கரம் பிரிவின் 100வது கால் பொருத்தும் வைபவம் கடந்த புரட்டாதி மாதம் 7ந் திகதி மன்னார் உதவிக்கரம் நிலையத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்கள் கலந்து கொண்டார். உதவிக்கரம் பிரிவின் தலைவர் அருட்சகோதரர் ச. றெஜினோல்ட் அவர்கள் இந்நிகழ்விற்கு தலைமை தாங்கினார். வாழ்வுதய இயக்குனர் அருட்பணியாளர் பி. யேசுராஜா அவர்கள் உதவிக்கரத்தின் கடந்தகால செயற்பாட்டறிக்கையை சமர்ப்பித்தார். மேற்படி வைபவத்தில் இடம்பெற்ற கண்காட்சியின்போது உதவிபெற்ற பலரின் புகைப்படங்கள், பணியாளர்களின் சேவை விபரங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. இந்நிலையத்தின் வைத்தியர் திரு. ராஜ்குமார் மற்றும் பணியாளர்களின் செயன்முறை விளக்கம் அனைவரையும் கவர்ந்தது.

(தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க)

## ஆசிரிய தினத்தில் சிறப்புச் சிந்தனை

### அன்புள்ள ஆசிரியரே....!

"நான் மக்கள் தடுப்பு முகாம் ஒன்றிலிருந்து உயிர் தப்பிய ஒருவன்.
எனது கண்கள் எந்தவொரு மனிதனும் காணக்கூடாத காட்சிகளைக் கண்டுள்ளன. படித்த பொறியியலாளர்களால் நிர்மாணிக்கப்பட்ட விஷ வாயு கொண்ட அறைகள், படித்த வைத்தியர்களால் விஷ ஊசியேற்றப்பட்ட பிள்ளைகள், பயிற்றப்பட்ட தாதிமாரால் கொல்லப்பட்ட சிசுக்கள், உயர் கல்லூரிகளில் படித்த மாணவர்களாலும் பல்கலைக்கழகங்களில் படித்த பட்டதாரிகளாலும் சுடப்பட்டு எரிக்கப்பட்ட, பெண்களினதும், குழந்தைகளினதும் சடலங்கள் ஆகியவற்றைக் கண்டு நான் அதிர்ந்துள்ளேன். இப்போது எனக்கு கல்வி மீது சந்தேகம்???
எனது கோரிக்கை, உங்களிடத்தில் கற்றுக்கொள்ளும் மாணவர்கள் மானிடத்தை நேசிக்க உதவுங்கள். உங்களது முயற்சி ஒருபோதும் படித்த இராட்சதர்களை, மனவிகாரம் கொண்ட திறன் படைத்தோரை, படித்த ஈச்மன்களை உருவாக்கக் காரணமாகாது இருக்கட்டும். வாசிப்பு, எழுத்து, கணிதம் என்பன குழந்தைகளை மேலும் மானிடங் கொண்டமைய வழி காட்டினால் மட்டுமே அவை முக்கியமானவையாக விளங்கும்."
(பிரித்தானிய ப்ரட் போர்ட் இடைநிலைப் பள்ளியின் விளம்பரப் பலகை ஒன்றில் பெயர் குறிப்பிடப்படாத ஒரு நபரால் எழுதப்பட்டு ஒட்டப்பட்டிருந்த வாசகம் இது.)

## மன்னார் குருக்களுக்கான வருடாந்த தியானம்

மன்னார் மறைமாவட்டக் குருக்களுக்கான வருடாந்தத் தியானம் ஐப்பசி மாதம் 20ந் திகதி தொடக்கம் 25ம் திகதி வரை மன்னாரில் இடம்பெற்றது. இந்தியாவில் இருந்து வருகை தந்திருந்த அருட்பணியாளர் அருள் சிவன் அவர்கள் இத்தியானத்தை நெறிப்படுத்தினார்.

## வாசகர்களே! எழுத்தாள அன்பர்களே!

மன்னாவின் 5 வருட நிறைவுச் சிறப்பிதழ் மற்றும் கிறிஸ்மஸ் புதுவருட, பொங்கல் சிறப்பிதழ்களுக்கான உங்கள் ஆக்கங்களை காலம் தாமதிக்காமல் உடனே எமக்கு அனுப்பி வையுங்கள். கருத்தாழம் மிக்க, சுவையான, சுருக்கமான ஆக்கங்களுக்கே முன்னுரிமை கொடுத்துப் பிரசுரிக்கப்படும் - (பதிப்பாசிரியர்)

"கடவுளின் செயலுக்காக நான் மௌனமாய்க் காத்திருக்கின்றேன்" (தி.பா 62: 1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனப்பொழிவு

# பதிப்பாசிரியர் பகர்வது

வணக்கம்

## ஆசிரியப்பணி பற்றிய அறிவுசார் மதிப்பீடு

ஆசிரியர்கள்! அகிலமெல்லாம் அறிவுச் சுடரை ஏற்றிவைக்கும் ஆசான்கள்! கல்வி என்ற செல்வத்தை கருத்தோடு வழங்கும் கல்வியாளர்கள். ஆம்! அக்டோபர் ஆறாம் திகதி அகில உலக ஆசிரியர் தினம். ஆசிரியர் தினம் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் ஒரு அருமையான நாள். தமக்குக் கல்விச் செல்வத்தை ஊட்டும் ஆசிரியப் பெருந்தகைகளை மாணவர்கள் நன்றியோடு நினைக்கும் நன்நாள். ஆசிரியர்கள் தம் பணியின் புனிதத்தை, மேன்மையை, சிறப்பை நினைத்து மகிழ்ந்திருக்கும் பொன்னாள். தமது ஆசிரிய அர்ப்பணத்தை ஆழப்படுத்தும் அருமையான நாள். உலகெங்கும் இன்று ஏறத்தாள 4 கோடி ஆசிரியர்கள் உள்ளனர். இலங்கையில் ஏறக்குறைய 2 இலட்சம் ஆசிரியர்கள் உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

### ஆசிரியப்பணியின் மேன்மை

அழிவற்ற செல்வமாகிய - கொடுக்க கொடுக்க அதிகரிக்கின்ற செல்வமாகிய கல்விக் கருவூலத்தை வழங்குகின்ற பெருமக்கள் ஆசிரியர்கள். சங்க காலத்திலே அரசர்களைவிட அந்த அரசர்களுக்கு கல்வி புகட்டிய ஆசான்களுக்கே அதிக மதிப்பு வழங்கப்பட்டதை நமது சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. அறியாமை என்ற இருளை போக்கும் ஞானவிளக்குகளே ஆசிரியர்கள் என்றார் சோக்கிரட்டீஸ். ஆசிரியர்கள் நல்ல சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் தூண்போன்றவர்கள் என்றார் மகாத்மா காந்தி.

ஆசிரியர் மாணவர் செல்லும் வழியைக் காட்டும் திசைகாட்டி. ஆசிரியர் ஒரு சமுதாயத்தை வழிநடத்தும் தலைவர். ஒரு சமுதாயத்தை உயர்த்துகின்ற ஏணிப்படி. எழுத்தறிவித்தவன் இறைவன் என்று சொல்லப்படும்போது ஆசிரியர்கள் நல்லறிவு புகட்டி வழிநடத்திச் செல்லும் கண்கண்ட தெய்வங்கள் என்றே இங்கு அர்த்தப்படுத்தப்படுகின்றது. ஆசு + இரியர் = ஆசிரியர். ஆசு - குற்றம், இரியர் - அகற்றுபவர். குற்றங்களை அகற்றி அறிவை ஊட்டுபவரே ஆசிரியர்.

### கற்பித்தல் சாதனங்கள் நிகராகா

இன்றைய விஞ்ஞான உலகில் எத்தனையோ நவீன கற்பித்தல் சாதனங்கள் உண்டு. ஆனால் அவை அனைத்தும் ஒரு ஆசிரியர் வழங்கும் அன்பை, பரிவை, அரவணைப்பை, அறிவுரையை, கண்டிப்பைத் தர முடியுமா?

### யார் பெருமைப்பட முடியும்?

ஒவ்வொரு ஆண்டும் வரும் ஆசிரிய தினத்தில் அனைத்து ஆசிரியர்களும் தமது பணி பற்றி பெருமைப்பட முடியுமா? தமது ஆசிரியப் பணி பற்றி பெருமைப்படக் கூடியவர்கள், மகிழ்ச்சியடையக் கூடியவர்கள் யார்? என்ற கேள்வியை நாம் எழுப்ப வேண்டும். எந்த ஆசிரியர் அர்ப்பணிப்பு உணர்வோடு - தியாக சிந்தையோடு பணிபுரிகின்றாரோ, எந்த ஆசிரியர் தமது நலனைத் தேடாமல் மாணவர்களின் வளர்ச்சியில், உயர்ச்சியில் அதிக அக்கறை காட்டுகின்றாரோ அப்படிப்பட்ட ஆசிரியர்களுக்குரிய தினம்தான் ஆசிரியர் தினம். அவர்களே இத்தினத்தில் பெருமைப்பட முடியும். மகிழ்ச்சி அடைய முடியும்.

### சுய மதிப்பீடு தேவை

ஆசிரியர்கள் தாம் செய்வது ஒரு தொழில் அல்ல - மாறாக அது ஒரு பணி என்பதை முதலில் உணர வேண்டும். கடமைக்காக, சம்பளத்திற்காக பணிசெய்கின்றவர்கள்... பாடசாலைக்கு பிந்தி வந்து முந்தி செல்பவர்கள் ... பாடசாலை நிகழ்வுகளில் ஏனோதானோ என்று இருப்பவர்கள்... சுருக்கமாக சொல்லப்போனால் ஆசிரியப்பணியின் புனிதத்திற்கு குந்தகம் ஏற்படும் வகையில் நடப்பவர்கள் தமது பணிபற்றி சுய மதிப்பீடு - சுய விமர்சனம் செய்ய வேண்டியவர்கள்.

வகுப்பறைப் பாடப்புத்தகங்களில் இருந்து மட்டும் மாணவர்கள் கற்றுக்கொள்வதில்லை. ஒவ்வொரு ஆசிரியரின் வாழ்வும் ஒரு திறந்த புத்தகமாக இருக்க வேண்டும். ஆசிரியர்களின் உதாரணமான வாழ்வு மூலம் மாணவர்கள் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்.

### மதிப்பு தேடி வரட்டும்

நம் மண்ணில் குறிப்பாக கத்தோலிக்க கிராமங்களில் பங்குத் தந்தையருக்கு அடுத்த படியாக சமுதாயத்தில் உயர் நிலையில் மதித்துப் போற்றப்பட்டு வந்தவர்கள் ஆசிரியர்கள். ஆனால் அந்த நிலை இன்று இல்லை. இன்று ஆசிரியர்கள் மாணவ சமுகத்தினால் மதிக்கப்படுவதில்லை என்றும் சமுகத்தில் ஆசிரியர்களுக்குரிய இடம் கொடுக்கப்படுவதில்லை எனவும் பொதுவாக குறைகூறப்படுகிறது. மதிப்பு என்பது வலிந்து பெற்றுக்கொள்வதல்ல. மாறாக அது இயல்பாக வரவேண்டிய ஒன்று. மாணவர்களைப் பற்றி முடிவு செய்யும் அதிகாரியாக, அன்பு செலுத்தும் அன்னையாக, கட்டுப்பாட்டை வளர்க்கும் தந்தையாக ஆசிரியர்கள் செயற்படும்போது மதிப்பு என்பது அவர்களைத் தேடி வரும். வெறுமனே வகுப்பறைக்குள் தமது பணியை சுருக்கிக்கொள்ளாது சமுகத்தின் மேம்பாட்டிற்காக உழைக்கும்போது - திருச்சபையின் பணிகளில் பங்காளிகளாக மாறும்போது சமுகம் ஆசிரியர்களை இனம்காணும், கனம் பண்ணும், கௌரவிக்கும்!

மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை
அன்புடன் - அருள்பணியாளர் நேசன்
பதிப்பாசிரியர்.




## மன்னா வின் 5 வருட நிறைவுச் சிறப்பிதழ் தொடர்பாக......!

### அன்புக்குரிய வாசகர்களே,

உங்கள் அபிமான மன்னா 5 வயதை நிறைவு செய்கிறது. (1997 - 2002) இதையொட்டி மார்கழி மன்னா 5 வருட சிறப்பிதழாக வெளிவருகிறது. மன்னா பற்றிய உங்கள் கருத்துக்கள், எண்ணங்கள், எதிர்பார்ப்புக்களை உங்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்.

### மன்னாவின் உள்ளூர் பணியாளர்களே,

மன்னாவை பங்குகளில் விநியோகம் செய்யும் எம் அன்புக்குரிய மன்னா பணியாளர்கள் கவனத்திற்கு, உங்கள் பங்கில் (உப பங்குகள் உட்பட) மன்னாவை விநியோகம் செய்யும் அனைவரினதும் பெயர், முகவரி, ஒவ்வொருவரும் விநியோகம் செய்யும் பத்திரிகையின் எண்ணிக்கை ஆகியவற்றை எமக்கு உடனே அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

### ஆய்வாளர்களே, படைப்பாளர்களே,


மன்னார் மக்களின் கலை, இலக்கியம், வரலாறு, தொழில், வாழ்வியல் தொடர்பான சுருக்கமான அதே வேளை ஆழமான, அறிவுபூர்வமான கட்டுரைகளை, ஆக்கங்களை உங்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்.

### மன்னாவின் வெளியூர்ப் பணியாளர்களே,

வெளிநாடுகளில் மன்னாவை விநியோகம் செய்யும் எம் அபிமானத்திற்குரிய மன்னா பணியாளர்கள் கவனத்திற்கு, உங்கள் பெயர் முகவரியுடன் உங்களைப் பற்றிய குறிப்பையும் புகைப்படத்தையும் தவறாமல் எமக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(பதிப்பாசிரியர்)

# வாசகர் எண்ணங்கள்



## மாதம் இருமுறை வரமாட்டாயா?

அன்று பாலை நிலத்தில் எங்களைச் சாகடிக்கவோ கூட்டி வந்தாய் என்று மோயீசனுக்கு எதிராகக் கொதித்த மக்களின் பசிபோக்க மன்னாவை வானத்திலிருந்து பொழிந்து பசி போக்கினார் இறைத் தந்தை. இன்று எம் ஆன்ம பசி போக்க மாதம் [illegible] மலராக வருகின்ற மன்னாவே நீ மாதமிரு மலராக வரும் நாளை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். அந்நாளும் இந்நாளாகாதோ மாதமொரு மலர் என்பதால் எப்போ வருவாய் என்று வழிமேல் விழி வைத்துக் காத்திருக்க வைக்கின்றாயே. உன் பணி சிறக்க வாழ்த்துகின்றேன்.

மோ. மாற்கு யேசுதாசன்,
ஆயர் இல்லம், மன்னார்.

## வரையறையற்ற மன்னா!

மாதமொருமுறை மறையின் நிறைகளை
மக்களுக்களித்திடும் மன்னாவே
மறை வாழ்வை மங்காமல் பரப்பிவரும் உன்னை
மனம் மகிழ்ந்து வாழ்த்துகின்றேன்.
இளைஞர்கள் இளமொட்டுக்கள்
கலைஞர்கள் கல்விமான்களும்
பொது நிலையினருடன் பொக்கை வாயினரும்
முகம் மலர்ந்திட நீ முந்தி வருகின்றாய்.
தரமான செய்திகளையும் தார்மீககொள்கைகளையும்
குழந்தை வளர்ச்சிக்கு பல நெறிகளையும்
குடும்ப வாழ்வுக்கு பல வழிகளையும்
ஆன்மீகத்துடன் அரசியலையும் தாங்கி நீ வருகின்றாய்.
தத்துவச் சொற்களெடுத்து உன்னை
இத் தரணிமீது வாழ்த்துகின்றேன்
வளர்க உன் பணி! தொடர்க உன் சேவை!

அருள்பணியாளர் அருள் பிரகாசம்,
நானாட்டான்.



## பசி போக்கும் மன்னா

உண்மையிலேயே ஆன்மீக பசிபோக்கும் உணவாக மன்னா வெளிவருகிறது என்று வெறும் வாயாலே கூறுவதைவிட ஆன்மீக வாழ்வின் எல்லா வழிகளையும் தாங்கிவரும் மீட்பின் கிண்ணம் என்று கூறுவதே பொருத்தமானதாகும். மன்னாவை விரித்தவுடன் அத்தனை பக்கங்களையும் ஒரே தடவையில் பார்க்க வேண்டும்போல் தோன்றுகிறது. அதுவே மன்னாவின் சிறப்பு. மேலும் மன்னா வாழ என் செபங்களும் வாழ்த்துக்களும்.

செ. மாணிக்கராசா, முருங்கன்.

## பதிப்பாசிரியரின் மனப்பொழிவு மனதைத் தொட்டது

மதிப்பிற்குரிய மன்னாப் பதிப்பாசிரியர் அவர்கட்கு,

எம் மறைமாவட்டத்திலே தவழ்ந்து வரும் மன்னாவை மிகவும் வாழ்த்துகின்றோம். அத்துடன் ஆனி மாத இதழில் பதிப்பாசிரியர் பகர்வது எனும் பகுதியில் பதிப்பாசிரியரின் மனப்பொழிவு மனதைத் தொட்டது. குடும்ப வாழ்வு பற்றி மிகவும் அழகாகவும், விளக்கமாகவும் எழுதியிருந்தீர்கள். மிகவும் மனதைத் தொட்டது. மிக்க நன்றி. மேலும் விஷேடமாக விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி தொடர்ந்து மன்னாவில் பிரசுரிப்பதால் அதில் ஈடுபாடு கூடுதலாக உள்ளமையால் மன்னா எப்போது எம் கரம் கிட்டும் எனும் அவா எம்மைத் தூண்டுகின்றது. ஆகவே சில வேளைகளில் மன்னா எம் கைக்கு காலதாமதமாகக் கிடைப்பதனால் இப்போட்டியில் பங்குபற்ற வாய்ப்பில்லாமல் போவதுடன் எத்தனையோ விடயங்களை சரிப்படுத்த முடியாமல் உள்ளது. எனவே தயவு செய்து இதற்கு ஒத்துழைப்பு நல்குவீர்களென நம்புகின்றோம்.

தங்கள் சேவை மென்மேலும் வளர இறையாசீர் வேண்டுகின்றோம்.

செல்வி. யா. அந்தோனியாப்பிள்ளை, மறையாசிரியர்,
தேவன்பிட்டி.

## மூப்பர் குடும்பம் ..........




**புனிதர் பொன்மொழி**

"ஏழைகளை நேசித்திருப்பவர்கள் அச்சமின்றி சாவை எதிர்நோக்கலாம்"

- வின்சென்ட் டி போல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்செய்தி அறிவிப்பு ஞாயிறு தினச் சிறப்பிதழ் (ஐப்பசி 20, 2002)

# “பணி என்பது மன்னிப்பை முழக்கமிடுவதாகும்”



## திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பரின் செய்தி




அன்பான சகோதர சகோதரிகளே,

1. திருச்சபையின் நற்செய்தி அறிவிப்புப்பணி என்பது நம் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் வாழ்வு, மரணம், உயிர்ப்பு, அகியவற்றின் மூலம் மனுக்குலத்திற்கு வெளிப்படுத்தப்பட்ட இறைவனின் அன்பையும், இரக்கத்தையும், மன்னிப்பையும் விஷேட விதத்தில் அறிவித்தலாகும். அதாவது இறைவன் நம்மை அன்பு செய்கிறார் - அனைத்து மக்களும் அவரது அன்பின் இரக்கத்தில் ஒன்றிணைய வேண்டுமென்று விரும்புகிறார் எனும் நல்ல செய்தியை அறிவித்தலாகும். இறைவன் நம்மை மன்னிக்கிறார், அவ்வாறே நாமும் நமக்கெதிராக எத்தகைய மாபெரும் குற்றங்களைச் செய்தவர்களையும் மன்னிக்க வேண்டுமென்று நம்மிடம் கேட்கிறார். புனித பவுல் கூறுவதுபோல் “உலகினரின் குற்றங்களை பொருட்படுத்தாமல் கடவுள் கிறிஸ்துவின் வாயிலாக அவர்களைத் தம்மோடு ஒப்புரவாக்கினார், அந்த ஒப்புரவு செய்தியை எங்களிடம் ஒப்படைத்தார்” (2 கொரி. 5: 19) எனும் ஒப்புரவின் வார்த்தை நம்மிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இந்த வார்த்தைகளே சிலுவையில் தொங்கிய கிறிஸ்துவின் இதயத்திலிருந்து வெளிவந்த பிரதானமான கூக்குரலின் எதிரொலியும் நினைவூட்டலுமாகும். “தந்தையே இவர்களை மன்னியும், ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை” (லூக். 23: 34).

இதனைத் தொகுத்துக் கூறுவோமானால் “பணி என்பது மன்னிப்பை முழக்கமிடுவதாகும்.” இக்கருப்பொருளுடன் ஐப்பசித் திங்கள் இருபதாம் நாள் நாம் கொண்டாடும் நற்செய்தி அறிவிப்பு ஞாயிறின் முக்கியமான உள்ளடக்கம் மன்னிப்பாகும். இந்நிகழ்வு ஒவ்வொரு வருடமும் கடந்து செல்லும் காலத்துடன் மீண்டும் மீண்டும் கொண்டாடப்படும் ஒரு நிகழ்வாயிருந்தபோதிலும் இது தனது விஷேட அடையாளத்தையும், முக்கியத்துவத்தையும் இழப்பதில்லை. ஏனென்றால் இயேசுவின் பிரதான கட்டளையான “நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள் ...... நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள்” (மத். 28:19) எனும் கட்டளைக்கு நாம் அளிக்கும் பதிலுரையே இந்த நற்செய்தி அறிவிப்பாகும்.

2. மூன்றாவது கிறிஸ்தவ மிலேனியத்தின் ஆரம்ப காலகட்டத்தில் இந்த நற்செய்தி அறிவிப்புக் கடமை முன்னைய காலங்களிலும் பார்க்க அதிகம் அத்தியாவசியத் தேவையாய் உள்ளது. ஏனென்றால் “மீட்பரின் பணி” எனும் சுற்றுமடலில் நான் குறிப்பிட்டுள்ளதுபோல் “கிறிஸ்துவை அறியாதவர்களின் எண்ணிக்கையும், திருச்சபையைச் சாராதவர்களின் எண்ணிக்கையும் தொடர்ந்து கூடிக்கொண்டே செல்கிறது”. உண்மையில் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் முடிவில் இது இரட்டிப்பாகியுள்ளது. தந்தையால் அன்பு செய்யப்பட்ட மனுக்குலத்தின் பாவத்தின் மட்டில் - யாருக்காகத் தம் மகனை அனுப்பினாரோ அந்த மனுக்குலத்தின் மிகப்பெரிய பாவத்தின் மட்டில் நாம் நமது கவனத்தைத் திருப்பும்போது, திருச்சபையின் நற்செய்தி அறிவிப்புப்பணியின் அவசியம் தெளிவானதாயுள்ளது.

மாபெரும் அப்போஸ்தலரும் நற்செய்தியறிவிப்பாளருமான புனித பவுலுடன் இணைந்து மீண்டும் நாம் கூறவிரும்புவது “நான் நற்செய்தியை அறிவிக்கின்றேன் என்றாலும் அதில் பெருமைப்பட ஒன்றுமில்லை இதனைச் செய்ய வேண்டிய கட்டாயம் எனக்கு உள்ளது. நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ எனக்கு கேடு .......! இது என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்பாகவுள்ளது” (1கொரி. 9: 16 -17).



கடந்த நூற்றாண்டில் இரத்தம் சிந்துதலுக்குக் காரணமாயிருந்த பயங்கர யுத்தங்கள், புரட்சிகளின் மட்டிலும் துரதிஸ்டவசமாக இன்றுவரை முடிவற்றவிதத்தில் உலகை வருத்திக்கொண்டிருக்கும் முரண்பாடுகள் மட்டிலும் நாம் அனைவரும் விழிப்புள்ளவர்களாய் இருக்கிறோம். எப்படியாயினும் பயங்கரமான கொடிய ஆன்மீக பொருளாதார ஏழ்மையினால் பாதிக்கப்பட்ட ஆண்களும் பெண்களும் இறைவனுக்காகவும் அவரது அன்பு நிறை இரக்கத்திற்காகவும் தாகம் கொண்டிருக்கிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. நற்செய்தியை அறிவிப்பதற்கான இறைவனின் அழைப்பு இன்றும் பலமானதாக உள்ளது. உண்மையில் இது உடனடித் தேவையாயுள்ளது!

3. எனது அப்போஸ்தலிக்க மடலான ‘மூவாயிரமாம் ஆண்டு வரும் வேளையிலே’ எனும் மடலில் துன்பத்தை அனுபவித்தவரும் மகிமை அடைந்தவருமான கிறிஸ்துவின் திருமுகத்தை தியானிப்பதன் முக்கியத்துவத்தை நான் உங்களுக்கு கோடிட்டுக் காட்டினேன். கிறிஸ்தவ செய்தியின் மையமாயிருப்பது சிலுவையில் அறையப்பட்டு உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் பாஸ்கா மறைபொருளை அறிவித்தலாகும். சிலுவையில் அறையப்பட்டுத் தாங்கொணாத் துயரை அனுபவித்தவரின் திருமுகத்தை தியானிக்கும்போது “அவரது மறைபொருளின் அதிகளவு மடைமைத்தனமான தோற்றம் சிலுவையில் அவாது இறுதி மணித்துளிகளில் வெளிப்பட்டதை நாம் பார்க்கிறோம்.” இறைவன் சிலுவையிலேயே தமது முழுமையான அன்பை வெளிப்படுத்தினார். சிலுவையே நம் விடுதலையின் திறவுகோல். “இது உலக ஞானமல்ல, உலகத் தலைவர்களின் ஞானமுமல்ல, ........ வெளிப்படுத்தப்படாமல் மறைபொருளாயிருக்கும் இறை ஞானத்தைப் பற்றியே நாங்கள் பேசுகிறோம்” (1கொரி. 2:6-7) . உயிர்த்த கிறிஸ்துவின் மகிமையான திருமுகத்தை ஏற்கனவே ஒளிரச் செய்த சிலுவை கிறிஸ்தவ வாழ்வில் முழுமையையும், நிறைவான அன்பையும் எமக்கு அறிமுகம் செய்கின்றது. ஏனென்றால் நமது உண்மையான வாழ்வையும், அவரது அன்பையும், புனிதத்துவத்தையும் இது எமக்கு வெளிப்படுத்துகின்றது. இந்த மறைபொருளின் ஒளியில் திருச்சபை தந்தையின் வார்த்தைகளை நினைவுக்குக் கொண்டுவருகின்றது. “உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராயிருப்பதுபோல் நீங்களும் நிறைவுள்ளவராய் இருங்கள்” (மத்.5:48). தனது நற்செய்தி அறிவிப்புப்பணியானது கிறிஸ்தவ வாழ்வின் முழுமைக்கு - அதாவது நிறைவான அன்புக்கும் புனிதத்துவத்திற்கும் இட்டுச் செல்லாவிட்டால் அது பயனற்றது என்பதை திருச்சபைத் தாய் மிகவும் தெளிவாக அறிந்துள்ளாள்.

சிலுவையை தியானிப்பதன் மூலம் நாம் தாழ்மை, மன்னிப்பு, அமைதி, ஐக்கியம் என்பவற்றுடன் வாழக் கற்றுக்கொள்கிறோம். இந்த அனுபவத்தையே புனித பவுல் எபேசியருக்கு எழுதிய மடலில் எடுத்துக் காட்டுகின்றார். “ஆதலால் ஆண்டவர் பொருட்டு கைதியாக இருக்கும் நான் உங்களைக் கெஞ்சிக் கேட்கிறேன். நீங்கள் பெற்றுக்கொண்ட அழைப்புக்கு ஏற்ப வாழுங்கள், முழு மனத் தாழ்மையோடும், கனிவோடும், பொறுமையோடும் ஒருவரை ஒருவர் அன்புடன் தாங்கி அமைதியுடன் இணைந்து வாழ்ந்து தூய ஆவி அருளும் ஒருமைப்பாட்டைக் காத்துக்கொள்ள முழுமுயற்சி செய்யுங்கள்” (எபே.4:1-3).

மேலும் அவர் கொலோசியருக்கு கூறுவது, “நீங்கள் கடவுளால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள், அவரது அன்பிற்குரிய இறைமக்கள், எனவே அதற்கிசைய பரிவு, இரக்கம், நல்லெண்ணம், மனத்தாழ்மை, கனிவு, பொறுமை ஆகிய பண்புகளால் ஒருவரையொருவர் பொறுத்துக்கொள்ளுங்கள். ஒருவரைப்பற்றி ஒருவருக்கு ஏதாவது முறையீடு இருந்தால் மன்னியுங்கள், ஆண்டவர் உங்களை மன்னித்ததுபோல நீங்களும் மன்னிக்க வேண்டும். இவை அனைத்திற்கும் மேலாக அன்பையே கொண்டிருங்கள். அதுவே இவை அனைத்தையும் பிணைத்து நிறைவுபெறச்செய்யும். கிறிஸ்து அருளும் அமைதி உங்கள் உள்ளங்களை நெறிப்படுத்துவதாக. இவ்வமைதிக்கென்றே ஒரே உடலின் உறுப்புக்களாக இருக்க அழைக்கப்பட்டீர்கள்” (கொலோ. 3:12-15).

4. அன்பான சகோதர சகோதரிகளே, சிலுவையில் தொங்கிய இயேசுவின் கதறல் ஒலி (மத். 27: 46) நம்பிக்கையற்ற ஒரு மனிதனது வேதனையின் வெளிப்பாடு அல்ல. மாறாக மனுக்குலம் முழுவதினதும் மீட்புக்காகத் தனது வாழ்வைத் தந்தைக்கு கையளித்த மகனின் செபம். நாம் மன்னிப்பை வழங்குவதற்குச் சாதகமான நிபந்தனைகளை இயேசு சிலுவையிலிருந்து எமக்குக் காண்பிக்கிறார். அவரைத் துன்புறுத்திச் சிலுவையில் அறைந்தவர்கள்மட்டில் பகைமை பாராட்டுவதற்குப் பதிலாக அவர்களுக்காகச் செபிக்கிறார். அவர் அவர்களை மன்னிப்பது மட்டுமல்ல அவர்களை தொடர்ந்து அன்பு செய்கிறார். அவர்களது நன்மையை விரும்பி அவர்களுக்காக பரிந்து பேசுகிறார். அவரது மரணம் அன்பின் முழுமையான வெளிப்பாடாய் உள்ளது.

சிலுவையின் மாபெரும் மறைபொருளுக்கு முகம் கொடுக்கும் எம்மால் முழந்தாளிட்டு அவரை ஆராதிக்க மட்டுமே முடியும். தந்தையின் சாயலுக்கு மனிதனை மீண்டும் கொண்டுவருவதற்காக இயேசு மனித சாயலைத் தாங்கியது மட்டுமல்ல, பாவத்தின் “சாயலால்” துன்பத்தை ஏற்கவும் நேர்ந்தது. “நாம் கிறிஸ்து வழியாகத் தமக்கு ஏற்புடையவராகுமாறு கடவுள் பாவம் அறியாத அவரை பாவநிலை ஏற்கச் செய்தார்” (2கொரி. 5: 21).

தன்னைத் துன்புறுத்தியோரை இயேசு முழுமையாக மன்னித்த நிகழ்வானது இறையரசில் ஒவ்வொருவருககுமான புதிய நீதியின் ஆரம்பமாயுள்ளது. இறுதி இராவுணவின்போது மீட்பர் தம் சீடர்களுக்குக் கூறியது “நான் உங்களுக்கு ஒரு புதிய கட்டளை கொடுக்கிறேன். ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள். நான் உங்களிடம் அன்பு செலுத்தியதுபோல நீங்கள் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள். நீங்கள் ஒருவர் மற்றவருக்கு செலுத்தும் அன்பிலிருந்து நீங்கள் என் சீடர் என்பதை எல்லாரும் அறிந்துகொள்வர்” (யோ.13: 34-35).

(அடுத்த இதழில் தொடரும்)

## ஐப்பசி மாதம் செபமாலை மாதம்

# செபமாலை பற்றிய சில தெளிவுகள்

### பாங்கான பயிற்சிக்கு தாளகதி தேவை!

காவல் படையினர் மற்றும் போர்ப் படையினர் நாள்தோறும் பயிற்சியில் ஈடுபடுகின்றனர். இதில் என்ன வியப்பு என்றால், இப்பயிற்சி முழுவதுமே இடது, வலது என்று கால்களை மாறி மாறி எடுத்து வைத்து நடை போடுவதே. காவலர்கள் திருடர்களைப் பிடிப்பதற்காக பாய்ந்து ஓடும்போதோ, அல்லது கலகக்காரர்களை அடித்து விரட்டும்போதோ இடது, வலது என்று நடைபோடுவதில்லை. அவ்வாறே, போர்ப் படையினரும் போர்க்களத்தில் நின்று எதிராளியை எதிர்த்துப் போர்புரியும் போதும் இடது, வலது என்று நடைபோட்டுப் போவதில்லை. பயிற்சியாளர் அனைவரும் ஒரே சீர்வரிசையில் அணிவகுத்து இடது வலது, இடது வலது என்ற ஒரே சந்தத்தில் நடைபோட்டு, மீண்டும் மீண்டும் ஒலிக்கின்ற ஒரே தாளகதியில் அவர்கள் பயிற்சியைப் பெறுகின்றபோது, அவர்கள் அறியாமலேயே அவர்கள் உள்ளத்திலே ஓர் ஒழுங்குமுறை, ஒத்திசைமுறை, ஒருங்கிணைப்பு படிந்துகொண்டே வருகிறது. அதே வேளையில் அவர்களுடைய உடலிலே ஒருவகை சீரும் சந்தமும் நிகழ்கிறது. அதாவது, இடது வலது என்ற அதே தாளகதியில் கால்களை மாறி மாறி முன்னே எடுத்து வைக்க, அவர் தம் தசை நார்களிலே தளர்ச்சியும், விறைப்பும், நெகிழ்ச்சியும் நெருக்கமும் மாறி மாறி ஒரே சீராக நிகழ்ந்து கொண்டே வருகிறது.



### ஆன்மீகத்திலும் அர்த்தமுள்ள பயிற்சி தேவை

அவ்வாறே ஆன்ம வாழ்விலும் கண்ணியம் மிகுந்த கட்டுப்பாட்டை ஏற்படுத்த, ஒரு பண்பட்ட பக்குவத்தை நம்மில் உருவாக்க, நாமும் ஆன்ம வாழ்விற்கு ஏற்ற சீர்வரிசையை, சந்த முறையை, தாளகதியை ஏற்படுத்தியே ஆகவேண்டும். அதற்கு ஏதுவாக இருப்பது ‘நாமாவளி’ போன்ற இறைநாமத்தை பலமுறை மீண்டும் மீண்டும் ஒரே வரிசமைப்பில் சொல்வது அல்லது அதே இறைநாமத்தை பஜனைப் பாடலாகப் பாடுவது ஆகும். பார்ப்பதற்கு இவற்றால் நமது நேரத்தை வீணடிக்கிறோமோ என்று தோன்றலாம். அல்லது இது மிக எளிதான பயிற்சிதானே என்று தோன்றலாம். ஆனால், இதில்தான் உலகியல் நியதிக்கு ஒத்த, உண்மையான ஆன்மீகப் பயிற்சி அடங்கியிருக்கிறது.

### செபமாலை செபிப்பதும் ஆன்மீகப் பயிற்சியே!

இப்படிப்பட்ட ஒரு பயிற்சியை தருகின்ற தக்கதொரு வழிமுறைதான் செபமாலை. ஸ்ரீராம ஜெபம், ஓம் நமச்சிவாய, இயேசுவுக்குப் புகழ் ஆகியவை போன்ற செபங்களை மீண்டும் மீண்டும் நம் உதடுகள் சொல்லச் சொல்ல நம் உள்ளத்திலும் ஆன்மாவிலும் ஒரு விதமான சந்தம், தாளகதி படிந்து கொண்டே வர வர, நம் ஆன்மாவும் ஒரு பக்குவ நிலையை அடைகிறது. தேவையான கட்டுப்பாட்டைப் பெறுகிறது. இந்தக் கட்டுப்பாடும் பண்பட்ட பக்குவமும்தான் சோதனைகளை எதிர்கொள்வதற்கு ஏற்ற கருவியாகவும் அமைகிறது. எவ்வாறு, போர்வீரன், இடது, வலது என்ற சந்தம் நிறை நடைப்பயிற்சியை மேற்கொள்வதன் மூலம் எந்த நெருக்கடியையும் மேற்கொள்கிறானோ, அவ்வாறே இந்த செபமாலையை மீண்டும் மீண்டும் சொல்லுவதன் மூலம் ஓர் ஆன்மீகவாதி எந்தச் சோதனையையும் எதிர்கொள்ள முடியும். ஒரு போர்வீரன் அந்த நடைப்பயிற்சிக்கென ஒவ்வொரு நாளும் ஒதுக்கப்படும் நேரத்தை வீண்பொழுது என்று நினைத்தால் அது எத்துணை பெரிய தவறோ, அவ்வாறே ஓர் ஆன்மீகவாதியும் இந்த செபமாலை பயிற்சியில் ஈடுபடுவதால் நேரம் வீணாகிறது என்று நினைப்பதும் ஒரு பெரிய தவறே ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பொழிவு


## தியாகம் - சிறுவர் சிந்தனைக் கதை

சில ஆண்டுகளுக்கு முன் அமெரிக்க நாட்டில் 50 மாடிகள் கொண்ட கட்டடம் ஒன்று தீப்பற்றிக் கொண்டது. அந்த மாடிகளில் இருந்த அனைவரும் கட்டடத்தின் மேல் பகுதியை அடைந்தனர். தீயணைப்புப் படை வந்தது. ஏணி ஒன்று கட்டடத்தின்மீது சாய்க்கப்பட்டது. ஆனால் ஏணியின் உச்சிப் பகுதிக்கும் கட்டடத்தின் உச்சிப் பகுதிக்குமிடையே ஐந்தரையடி இடைவெளியிருந்தது. மாடிமீது இருந்தவர்களால் ஏணிமீது கால் வைக்க முடியவில்லை. காரணம் அந்த ஐந்தரையடி இடைவெளி. அதைக் கண்ணுற்ற தீயணைப்புப் படைத் தலைவர் ஏணிமீது ஏறி உச்சிப்பகுதியில் நின்று கொண்டு, தன் தலைமீது காலை வைத்து இறங்கி வருமாறு கூறினார். இதைப் பயன்படுத்தி அனைவருமே கீழே இறங்கி உயிர் தப்பினர். எல்லோரும் அவர் தலையைப் பயன்படுத்திக் கீழே இறங்கியதால் தலைவர் பலமிழந்து சோர்வுற்றிருந்தார். கீழே இறங்க முயன்றார், உடலில் பலமில்லை. கீழே விழுந்து இறந்தார். எல்லோரையும் காப்பாற்றிய அவரைக் காப்பாற்ற அங்கே யாருமில்லை.


"உருகாத மெழுகால் ஒளிதர முடியாது" கிறிஸ்து நமக்காக தம் உயிரைக் கொடுத்தார். இதனால் அன்பு இன்னதென்று அறிந்தோம். ஆகவே நாமும் நம்முடைய சகோதரர்களுக்காக நம் உயிரைக் கொடுக்க வேண்டும்.

தா. தவநிகிலா, ஆண்டு - 6, கோமரசங்குளம்.

## புனிதர் என்றால் யார் தெரியுமா?



குறை பேசுபவர்கள் அல்லர்



பயணத்தில் அவர்கள் சுமை எளிது

## சிறுவர் தொடர் கதை

### சிவந்த மணல் - அங்கம் 3

### புனித அருளானந்தர்



9. "குருப்பட்டம் என்ற திருநிலைப்படுத்துதல்" அருட்சாதனத்தைப் பெற்ற உடனே நம் புனிதர் இந்திய மண்ணிற்குப் புறப்பட்டு விட்டதால், இன்னும் அவர் இறையியல் கல்வியை முடிக்காத நிலையில் இருந்தார். எனவே சில மாதங்கள் புனித சின்னப்பர் கல்லூரியில் தங்கி இறையியல் கல்வியை முடித்தார். ஓய்வு நேரங்களில் மறை உரை ஆற்றுவார், சிறு பிள்ளைகளுக்கு மறைக்கல்வி கற்பிப்பார். திருவருட்சாதனங்களை நிறைவேற்றுவார்.

10. அக்காலத்தில் கோவாவிலிருந்து பிரிக்கப்பட்டு, கீழ்த்திசை நாடுகளான சீனா, ஜப்பான் என்ற அனைத்துப் பகுதிகளும் "மலபார் மாநிலம்" என்று அழைக்கப்பட்டது. அதன் முக்கிய பகுதியாக "மதுரை மிஷன்" செயல்ப்பட்டது. இதன் மூலம் புதிதாக மக்களை மனந்திருப்பும் பணியில் ஈடுபட்டிருந்த குருக்களின் சேவைப்பணியிலும் ஒரு தனித்தன்மை வேறுபாடு காணப்பட்டது. ஆங்காங்குள்ள மொழி, பண்பாடு, மக்கள் நிலை என்ற அடிப்படையில் இவர்கள் தம் அப்போஸ்தலப் பணியை மாற்றி அமைத்துக்கொண்டனர். அக்காலத்தில் மலபார் மாநிலத்தின் மையத்தளமாக அமைந்திருந்த அம்பலக்காடு என்ற ஊரினை அடைந்தார் நம் புனிதர். அங்கு மறைபோதகப் பணிக்குத் தேவையான தமிழ் மொழியினைக் கற்கத் தொடங்கினார்.

11. ஜோசப், இக்னேசியஸ் போன்ற மேல்நாட்டுப் பெயர்கள் தமிழ் மொழியில் சூசை, இஞ்ஞாசி என்று மாற்றப்பட்டதை உணர்ந்த நம் புனிதர் தம் பெயரான "ஜான் பிரிட்டோ" வை "அருளானந்தர்" என அழகிய பெயராக்கினார். பெயரை மாற்றியதோடல்லாமல், உண்மையிலே ஒரு தமிழ்த் துறவி போல் விளங்கிட "காவி உடையணிந்து" சமுதாயத்தில் தாழ்ந்தவர்களாய் எண்ணப்பட்ட எளிய மக்களுக்கு "பண்டார சுவாமி" யாகினார் நம் புனிதர்.

12. பின் அம்பலக்காட்டைவிட்டு நீங்கி செஞ்சி நாட்டைச் சார்ந்த சிதம்பரத்திற்கு அருகிலுள்ள கொளை என்ற பணித்தளம் செல்ல அவருக்குக் கட்டளை வருகிறது. இவரது இறுதி நாள் கொலையைக் குறிக்கும் அடையாளமாகவே இவரது முதல் பணித்தளம் கொளை எனும் பெயரால் அமைந்ததோ? திருப்பயணம் என்றால் ஆபத்துகள் அற்றது என்றா பொருள், அல்லவே! ஆம், அவரது வழிப்பயணத்தில் பல இடர்பாடுகள்! ஒரு நாள் மாலை அடைமழை பெய்தது. கால் சென்ற வழியே நடந்து சென்றபோது ஒரு வீடு தென்பட்டது. ஒதுங்குவதற்கு அடைக்கலம் கேட்டபோது, வீட்டுக்காரர்களின் எண்ணமெல்லாம் இவர் நாம் அறிந்த சாதியின் பட்டியலில் இடம்பெறவில்லையே இதனால் வீட்டின் வெளித்திண்ணையிலே இரவு தங்கிச் செல்ல அனுமதி கிடைத்தது. பசியுடன் படுத்துறங்கி, மறுநாள் அதிகாலையில் எழுந்து மேலும் நடக்கலானார்! (தொடரும்)

# கவிதைப் பூக்கள்

## அத்தனையும் அமைதிக்காக!

எத்தனை எத்தனை வெண்புறாக்கள்
வானில் பறந்தாலும்
அத்தனையும் எதற்காக? அமைதிக்காக!

எத்தனை எத்தனை மானிடர்கள்
உலகிலே அலைந்தாளும்
அத்தனையும் எதற்காக? அமைதிக்காக!

எத்தனை எத்தனை உயிரினங்கள்
பூமியிலே திரிந்தாலும்
அத்தனையும் எதற்காக? அமைதிக்காக!

ய. டொறின் பெரேரா, 8ம் வட்டாரம், பேசாலை.

## அன்பே...அன்பே....!

அன்பே அழகாம் அன்பே அமுதாம்
அன்பே அறமாம் அன்பே இறையாம்
பொறுமையுடையது அன்பு. பரிவுடையது அன்பு.
சிறுமையை நாடாது அன்பு. பெருமை தேடாது அன்பு
சீற்றம் கொள்ளாது அன்பு. ஏற்றம் கொள்ளாது அன்பு.

அ. அனுஷா (அர்ச்சனா), துட்டுவாகை, நேரியகுளம்.

## புதுவாழ்வு மலரட்டும்!

சிரித்திடுவாய் மகிழ்ந்திடுவாய் - மனம்
சரிகையிலே விழித்திடுவாய்.
உருத்தழியும் வாழ்க்கையிலே - உன்
அடிச்சுவட்டைப் பதித்திடுவாய்.
போரால் அழிவுற்ற நாட்டிற்கு
புது விடியல் கிடைக்கட்டும்.
புதிய வசந்தங்கள் வீசட்டும்
புதுவாழ்வு மலரட்டும்!

மி. ஆன் சுஷாந்தினி, முருங்கன்பிட்டி, முருங்கன்.

## ஓலைக் கூரையின் புலம்பல்

வெயிலிடம் கெஞ்சிப் பார்த்தது
மழையிடம் அழுதும் பார்த்தது
என்ன செய்வது?
தினமும் புலம்பியபடி
நைந்து பிய்ந்து
உருக்குலைகின்றது
எங்கள் ஓலைக் கூரை.

ஜே.ஜெஸ்ரீபன், ஆண்டு - 8, கோமரசன் குளம்.

# சிரிக்க நீங்க ரெடியா



## வெளியே போகும் வழி

வெளிநாட்டுக்கு சென்ற ஓர் இலங்கையரிடம் செலவுக்குப் போதிய பணமில்லை! மலிவான கோட்டல் ஒன்றை தேடியலைந்தார். இலங்கையர் நடத்தும் கோட்டல் ஒன்றைக் கண்டு பிடித்தார். சாப்பிடுவதற்காக உள்ளே நுழைந்தார். அதில் ஐரோப்பா, சீனா, இலங்கை என மூன்று பிரிவுகள் இருந்தன. இலங்கைப் பிரிவுக்குச் சென்றார். அதில் சைவம் அசைவம் என்று இரு பிரிவுகள் இருந்தன. அதிலும் நெய் - வனஸ்வதி என்று இரு பகுதிகள் இருந்தன. வனஸ்வதி பிரிவுக்குச் சென்றார். அதில் காசு - கடன் என இரு பிரிவுகள் இருந்தன. உடன் காசு கொடுக்காமல் சாப்பிடலாம் என்ற நிம்மதிப் பெருமூச்சுடன் கடன் பிரிவுக்குள் நுழைந்தார். அங்கே "வெளியே போகும் வழி" என்ற பெயர் பலகை மாட்டி இருந்தது......!

*ஒருவன்:* "ஏய்யா காகத்தை பிடித்து நீரிலே அமுக்கி கொண்டிருக்கின்றாய்?"
*மற்றவன்:* "அது கரைகிறதா என்று பார்க்கின்றேன்"

*சுமல் :* "பல்வைத்தியரான உங்கள் மகனுக்கும் உங்களுக்கும் என்ன தகராறு?"
*பல் வைத்தியரின் தந்தை:* அவன் என் சொத்தை எல்லாம் புடிங்கிற்றான்!

அனுப்பியவர்: அ. ஜஸ்மின் ஷறோன், ஆவணம், நானாட்டான்.

ஒருவர்: "இப்போ என் மனைவிக்கு நான் பயப்படுறதே இல்லை"
மற்றவர்: "எப்படிடா உனக்கு வீரம் வந்திச்சி."
முதலாமவர்: "அட நீ வேற.... அவ போனவாரம் பாத்ரூமில் வழுக்கி விழுந்து கை அடிபட்டு கிடக்கிறாடா!"

*விமல்:* "வெள்ளிக் கிழமைகளில் என் மனைவி மௌன விரதம் இருக்க ஆரம்பிச்சிட்டா..."
*அமல்:* "சந்தோசப்பட வேண்டிய விசயம்தானே?"
*விமல்:* "அட நீ வேற ... வாய்திறந்து திட்ட முடியாததால அன்டைக்கு மட்டும் என்னை கைநீட்டி அடிக்கிறாளே..."

*ராணி:* "சினிமா டைரக்டரோட பையன் கிளினிக் வைச்சிருக்காரு போலிருக்கு..."
*தேவி:* "ஆமாம்! எக்ஸ்ரே எடுக்குறதுக்கும்கூட "ஷாட் ரெடி" என்று சொல்றாரு!

அனுப்பியவர்: சே. ஜனனி, (தி.பா.சபை) கோமரசன் குளம்.

## சத்தம் கேட்குதில்லையப்பா



1970களுக்கு முன்பு நாம் தொலைவில் உள்ள ஒருவரிடம் தொலைபேசியில் பேச வேண்டி வரும்போது தொலைத் தொடர்பு அலுவலகத்தில் உள்ள இயக்குநர் உதவியுடன்தான் தொடர்பு கொள்ள வேண்டி இருந்தது. அப்போதெல்லாம் நேரடி தொலை தொடர்பு முறை இருக்கவில்லை. இரு முனைகளிலும் இருந்து பேசுபவர்களின் உரையாடலை விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இடையில் உள்ள இயக்குநரால் கேட்கக்கூடியதாக இருந்தது.

கொழும்பில் இருக்கும் நண்பருடன் பேசுவதற்காக ஒருவர் கண்டியில் தனது அலுவலகத்தில் உள்ள தொலைபேசியின் மூலம் தொலைத் தொடர்பு அலுவலகத்தில் நண்பரின் தொலைபேசியின் இலக்கத்திற்கு தொடர்பு ஏற்படுத்தி தருமாறு வேண்டினார். சில நிமிடங்களில் தொடர்பு கிடைத்தது. கண்டியில் இருப்பவர் பேச்சை ஆரம்பித்தார்.

"ஹலோ நான் கண்டியில் இருந்து கோவிந்தன் பேசுகின்றேன். சுகமா இருக்கிறீர்களா? நான் பேசுவது கேட்கிறதா? என்னை நினைவிருக்கா?"
கொழும்பில் இருந்து பதில்: "ஹலோ நல்ல சுகம் உங்களை மறக்க முடியுமா? உங்க குரலைக் கேட்கவே ஆசையாக இருக்கு. அப்புறம் என்ன விசேஷம்?"
கண்டி: "வேறொன்றுமில்லை, சென்ற மாதம் நீங்கள் என்னிடமிருந்து எடுத்த ருபாய் பத்தாயிரம் இப்போது எனக்கு தேவைப்படுகிறது. அதை எப்போது தரலாம் என்று சொல்வீர்களா?"
கொழும்பு: "சத்தம் சரியாக கேட்குதில்லை. கொஞ்சம் சத்தமாக பேசுங்க".
கண்டி : சத்தமாக "எனது பணம் எனக்குத் தேவைப்படுகிறது, எப்போது தருவீங்க?".
கொழும்பு: "நீங்க சொல்வது சரியாக் கேட்குதில்லை. கொஞ்சம் சத்தமாக பேசுங்க".
கண்டி: "எனக்குப் பணம் தேவை எப்ப தரப்போற" களைத்துப் போனவர் தொண்டை கிழிய கத்தினார்.
கொழும்பு: "சத்தம் சரியாக கேட்குதில்லை" இவ்வுரையாடலை இடையில் கேட்டுக் கொண்டிருந்த இயக்குநர் கொழும்புக்காரரிடம் "ஏம்பா பொய் சொல்ரே சத்தம் தெளிவாக இருக்கிறதே" என்றார்.
கொழும்புக்காரர் இயக்குநரிடம் : அவர் சொல்லறது உனக்கு கேட்கிறதா?
இயக்குநர்: ஆம்
கொழும்பு: அப்ப நீ அந்தப் பணத்தை அவருக்கு கொடு.....!
இயக்குனர்: ............? ? ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வு தரும் வார்த்தை

# பாவமும் அதன் விளைவுகளும்

அருட்சகோதரர் ம. நிர்மலராஜ், (செ.தா) அம்பிட்டியா, கண்டி

### முன்னுரை

சிதைந்த உலகில் நாம் சீவித்துக்கொண்டிருக்கின்றோம். கடவுள் விரும்பும் புதிய வானமும் புதிய பூமியும் பல தடுமாற்றங்களின் ஊடாகத்தான் உருவாக வேண்டியுள்ளது. மனிதன் நிறைவாழ்வு பெறவேண்டும் என்பதே கடவுளின் விருப்பம். ஆனால் அந்த நிறைவாழ்வு ஒரு கனவாக மட்டுமே மாறிவிட்ட சூழ்நிலை இன்று காணப்படுகின்றது. மனித உயிர்கள் சிதைக்கப்பட்டு மடிந்து கொண்டிருக்கும் இச்சூழ்நிலையில் விவிலியமும் புரிந்து கொள்ளமுடியாத ஒரு புதிராகவே பலரின் கண்களுக்குத் தெரிகின்றது. இன்று மனித வாழ்வானது விடைகாண முடியாத வினாவாக - கலங்கரை விளக்கைத் தேடும் படகாக - சாவின் நிழல்களின் மத்தியில் நிஜங்களைத் தேடும் ஒரு சங்கட நிலைக்குரியதாகிவிட்டது. இவை அனைத்திற்கும் காரண கர்த்தா மனிதனே!


மனிதன் படைத்தவனை மறந்து படைப்பாளி போன்று ஆகி விட எண்ணிய துயர் நிலையே இன்றைய மனிதனின் பாவ நிலைக்குக் காரணம். மனிதனின் பாவ வரலாற்றை பழைய ஏற்பாட்டு நூல்கள் நமக்கு படம் பிடித்துக் காட்டுகின்றன.

**தொடக்க நூல்:-** படைப்பனைத்தும் படைக்கப்பட்டன. அதில் மனிதன் படைப்பின் சிகரம் என்ற பட்டத்தைப் பெற்று இன்பவனத்தில் வாசம் பண்ணுகின்றான். இதில் முதல் மனிதன் எனப்படுவோர், ஆதாமும், ஏவாளுமே. இவர்கள் தங்களுக்கென்று கொடுக்கப்பட்ட சுதந்திரத்தை மறந்து கடவுளைப்போல மாற எண்ணுகின்றனர். கடவுளுக்கு கீழ்ப்படிய மறுக்கின்றனர். இதனால் நன்மை தீமை அறியும் மரத்தின் கனியை, பாம்பின் சொல் கேட்டு இருவரும் உண்ணுகின்றனர். இதனால்தான் தான் நிர்வாணமாக இருப்பதை மனிதன் உணர்கின்றான்.

பாவத்தை தேடிக்கொண்டான். இதனால் மனுக்குலத்திற்குள் தீமைகள் குடி புகுகின்றன. இத்தீமைகள் சமுதாயத்தில் மென்மேலும் பரவுகின்றது. ஆதிப்பெற்றோர் செய்த பாவத்தின் நிமித்தம் அவர்களின் புதல்வர்களான காயினும், ஆபேலும் பாவத்தின் விளைவுகளுக்கு உட்படுகின்றனர். ஒருவரை ஒருவர் கொல்லுதல், களவெடுத்தல், பொய் சொல்லுதல், பிறரை வஞ்சித்தல், மூதாதையரின் சொற்களை செவிமடுக்காமை, சகோதரத்துவத்தன்மை மதிக்கப்படாமை போன்ற பாவங்கள் ஏற்படுகின்றன. இதன் காரணத்தால் மனிதன் இறைவனை விட்டுத் தூர நடக்கின்றான். இறைவனிடமிருந்து பிரிந்து செல்லுகின்றான்.

**விடுதலைப் பயண நூல் :** இந்நூலில் மனிதனின் அடிமை வாழ்வு அவனது கீழ்ப்படியாத் தன்மையால் உருவானது என்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது. இந்த அடிமை வாழ்வுக் காலம் மனிதனின் கல்லான மனத்தைக் கரைக்கவும் புதிய உணர்வைப் பெற்று, இறைவனை நிறைவாகத் தேடவும் கொடுக்கப்பட்ட காலமாகும். மனிதனை அடிமைத் தனத்திலிருந்து விடுவித்த வரலாற்றையே விடுதலைப் பயணத்தில் நாம் காண்கின்றோம்.

**லேவியர் நூல் :** இந்நூலானது இஸ்ராயேல் மக்கள் செய்த பாவத்தினது தண்டனைகளைக் குறைக்க அவர்கள் செலுத்தும் பாவப்பரிகாரக் காணிக்கைகளைப் பற்றி கூறுகின்றது.



**எண்ணிக்கை நூல் :-** இந்நூல் இஸ்ராயேல் மக்கள் பாலை நிலத்தில் பயணம் செய்ததையும் பல்வேறு சந்தர்ப்பங்களில் கடவுளுக்கெதிராக அவர்கள் முறையிட்டதால் அவர்கள் தண்டிக்கப்பட்ட நிகழ்வுகளையும் எடுத்துக்கூறுகின்றது.

**இணைச்சட்ட நூல் :-** இந்நூல் கடவுளின் மக்கள் தம் கடமைகளை மறந்து ஒழுக்க விதிகளை மறந்து, கடவுளின் குரலுக்குக் கீழ்ப்படிய மறுத்ததால், கடவுள் பல்வேறு விதத்தில் மக்களுக்கு எச்சரிக்கை விடுப்பதைக் கூறுகின்றது.

### பாவம் என்றால் என்ன?

பாவம் என்பது மனித குலத்திற்கு எதிராகவோ, அதன் நலனுக்கு எதிராகவோ இறைவனுக்கு எதிராகவோ இழைக்கப்படும் குற்றமாகும், மற்றும் பாவம் என்பது நிபந்தனையற்ற அன்பு காட்ட மறுத்தலாகும், இறை அன்புக்கு செவி சாய்க்க மறுத்தலாகும், தன்னலம் காரணமாக அயலானை ஏற்க மறுத்தலாகும், அடிமைத்தனத்தை நிலைப்படுத்த சுதந்திரத்தை உதறித்தள்ளுவதாகும்.

1. கீழ்ப்படியாமை - எசாயா 65 : 12
2. சாத்தானோடு கொள்ளும் உடன்படிக்கை- எரே. 13: 1-11
3. இறைவனை எதிர்க்கின்ற மனோபாவம் -
   யோவான் 8: 44, வி.ப. நூல் 32:1, மத். 6 : 26

பாவங்களுக்கு மூலகாரணங்களாக உள்ளவை தற்பெருமை, தன்னலம், முறைகேடான நேசம், பணத்தாசை என்பவைகளாகும். பாவம் பல நூற்றாண்டுகளாக பரவி பரந்து விரிந்து கிடக்கும் நச்சுமரமாகி விட்டது. பாவத்தை பற்றிக் குறிப்பிடும் விவிலியப் பகுதி எரே: 2: 19, தொ. நூ. 3: 8-12 பாவம், புண்ணியமென்பது மனத்தளவிலேயே உள்ளது. அவற்றின் அடையாளமாகவே செயல்களில் அவை வெளிப்படுகின்றன. வெளிச்செயல்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்து, உள்ளார்ந்த சிந்தனைகளை பற்றி எண்ணாமல் இருப்பது முறைமாறி முக்கியத்துவம் கொடுப்பது போன்றதாகும்.

முதலில் நாம் சிந்தனை அளவில் பாவம் செய்யாது இருக்கவேண்டும். சில சமயங்களில் வெளிச்செயல்கள் பாவங்கள் போன்று தோன்றினாலும் அவை உண்மையில் பாவமில்லாமல் இருக்கும். சில சமயங்களில் வெளிச்செயல்கள் நல்லவைகள் போல தோன்றலாம், ஆனால் உண்மையில் அந்த செயல்களை செய்பவன் பாவியாக இருக்கலாம். இவ்வாறு உலகில் நடக்கிறதை காணக்கூடியதாக உள்ளது. இப்போது பலர் நான் எங்கே பாவம் செய்தேன் என்று தங்களையே நியாயப்படுத்திக் கொள்கின்றார்கள். இதற்குக் காரணம், இவ .கள் செயல்களில் மட்டுமே பாவத்தை பார்க்கின்றார்கள். கொலை செய்வதில்லை, விபச்சாரம் செய்வதில்லை, என்று ஒருவர் சொல்லிக்கொண்டே போகலாம். இத்தகைய பாவங்களை நாம் செய்யாமல் இருக்கலாம். ஆனால் உள்ளத்தளவில் எத்தனையோ பாவங்களை செய்கின்றோம் என்பதை உணராமல் இருக்கின்றோம். குறிப்பாக கடவுளை தேர்ந்து கொள்ளவில்லையெனில் அவரை சுதந்திரமாக அன்பு செய்ய வில்லையெனில் நாம் பாவியாக மாறுகின்றோம்.

### பாவத்தின் விளைவு

பாவத்தின் கூலி மரணம். மனிதன் மரணத்தை தழுவிக் கொள்வதில்லை. மரணம்தான் மனிதனைத் தழுவிக் கொள்கின்றது. விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் தட்டாமல் வரும் கட்டாய விருந்தாளி மரணம். மனிதன் பாவத்தில் அமிழ்ந்து, துக்கத்தில் துவண்டு மரணமே உனக்கு மரணம் வராதா என்று சாபமிடுகின்றான். மண்ணில் பிறந்து மனிதர்களை ஏமாற்றினாலும் - கடலில் மிதந்து கடவுளை ஏமாற்ற நினைத்தாலும் மரணத்தின் பிடியிலிருந்து யாரும் தப்பமுடியாது. ஏனெனில் மனிதன் தானாகவே தேடிக்கொண்ட முடிவே மரணம்.

### இன்றைய உலகில் பாவங்கள்

இன்றைய மனிதனின் வாழ்வு என்பதே ஜாலி அதை வாழ்ந்து பார்ப்பதே சோலி என்ற உணர்வோடு கண்போன போக்கிலே மனம் போய் "கண்டதே காட்சி கொண்டதே கோலம்" என்று வாழத்துடிக்கும் மனிதன் சொல்லொன்னாத் துயரங்களை அனுபவிப்பதை தினமும் பார்க்கின்றோம். விவிலிய நோக்கின் அடிப்படையில் சோதோம் கொமோராவின் நிகழ்வே எம்முடைய உலகில் இடம்பெறுகின்றது. எங்கும் தீமை, எதிலும் ஊழல், கொலை, கொள்ளை, அரசியல் அடக்குமுறை, கலாச்சார சீர்கேடு, பொருளாதார பின்னடைவு போன்றவை சமுதாயத்தில் புற்றுநோய்போல் பரவி வருகின்றது. உதாரணமாக தற்கொலை. வாழ்க்கை என்பது இறைவனால் கொடுக்கப்பட்ட கொடை அதை வாழ்ந்துதான் மனிதன் அனுபவிக்க வேண்டும். வாழ்ந்துதான் அதை முடிக்க வேண்டும். இன்றைய இளைஞன் என்ன நினைக்கின்றான். தனக்கு நினைத்தது நடக்கவில்லை என்றால் தனக்குத்தானே முடிவைத் தேடிக்கொள்கின்றான். தற்கொலை வருடத்திற்கு வருடம் அதிகரிக்கின்றது. இது காதல் தோல்வி, வேலையில்லா நிலை, தேர்வில் தோல்வி, வறுமை, தெளிவற்ற மனநிலை, மாமியார் கொடுமை போன்ற காரணங்களால் ஏற்படுகின்றது.

### முடிவுரை

மனுக்குலத்தின் சிகரமான மனிதன் தனது சுதந்திரத் தன்மையை இழந்து, இவ்வுலகின் மாயைகளுக்கும், தீமைகளுக்கும் அடிமையாகாமல் வாழ்தலே ஒரு உண்மையின் வாழ்வாகும். இது ஒவ்வொரு மனித உள்ளுயிரிலும் உந்தப்பட்டு, உருவாக்கம் பெற வேண்டும். அதாவது ஒவ்வொரு ஆன்மாவின் தேடலும் நிறைவாழ்வை நோக்கியதாக அமைய வேண்டும். ஆயினும், கருவறையில் தொடங்கிய மனித வாழ்வு, கல்லறை மட்டும் துன்ப துயரங்களை கடந்தே செல்ல வேண்டும் என்பதே இறைவனின் நியதி. இதை ஒவ்வொரு மனித உள்ளமும் தாழ்மையோடும், கீழ்ப்படிவோடும் ஏற்று இறைத் திட்டத்தை நிறைவேற்றுவதே எமது கடமையும், உரிமையுமாகும்.

# செபிப்போம் உலகை ஜெயிப்போம்



எப்படி செபிப்பது என்ற கேள்விக்கு பதில் சொல்ல முடியாது. நண்பனிடன் எப்படி பேசுவது என்று கேட்க முடியுமா? இதயம் விரும்பும் நல்ல நண்பனிடம் அமர்ந்துவிட்டால் நேரம் செல்வதே தெரிவதில்லை. என்ன பேசினோம், எப்படி பேசினோம், எவ்வளவு பேசினோம் என்ற வரைமுறை இல்லை - இரண்டு இதயங்களும் சங்கமித்து மகிழ்ந்தன - அதுதானே நடந்தது. அதுதானே செபம். அப்பாவின் நினைவாக, அவர் பாதம் வந்துவிட்டால், உலகமே மறந்துவிடுகிறது. இதயத்தின் பாரமெல்லாம் கரைந்து போகிறது. இதயம் இலகுவாகிறது. கண்கள் கண்ணீரைப் பொழிந்துகொண்டேயிருக்கின்றன.

இந்தக் கண்ணீர்தானே நம் நேசருக்குப் பிரியமான கவிதைத் துளிகள்! நம் நேசர் மிக மிக இனியவர். அவரது குரல் மிக மிக இனிமையானது! தன் மறைநூல் வார்த்தைகளை அவர் விளக்கிச் சொல்லும்போது - "ஓ, இவ்வளவு அழகான முத்துக்களும், பவளங்களும், வைரங்களும் இங்கேதான் இருந்தனவா?" என்று நம் உள்ளம் துள்ளி மகிழ்கிறது. இந்த இனம் புரியாத பேரின்பத்தை செபத்தில்தானே சுவைக்க முடிகிறது!

அப்பாவின் பாதத்தில் அமர, தூய ஆவியார் தூண்டும்போதெல்லாம், மெல்லிய சிறகடித்துப் பறக்கத் துடிக்கும் போதெல்லாம், அந்த பொன்னான நேரத்தைத் தட்டிக் கழிக்கத்தான் முடியுமோ? அந்தப் பொன்னான பொழுதுகளை இழக்கத்தான் மனம் வருமோ? ஓ செபமே ஜீவன்! செபமே இதய சங்கீதம்! ஜெபமே வாழ்வின் வலிமை! செபமே பரிசுத்தத்தின் பாலம்! இதயத்தின் மூச்சான செபத்தை எப்படித்தான் விவரிப்பது?

முழங்காலின் தேய்வுகளை எப்படித்தான் விளக்குவது?

அர்ப்பணமே ஆரம்பம். ஆமென் என்பதே அர்ப்பணம். செபம் முடிந்து விட்டது. நேரம், வார்த்தைகள் பொருட்டே அல்ல.

எத்தனை மணிநேரம் செபித்தேன் என்பதா பிரதானம் - இல்லவே இல்லை. வேத வசனங்களையே சொல்லி சொல்லி செபித்தேன் என்பதா பெருமை - இல்லவே இல்லை. பரவசப் பேச்சு பலவிதமாக பேசினேன் என்பதா இலக்கணம் இல்லவே இல்லை. என்னை மறந்து ஆடிப்பாடி மகிழ்ந்தேன் என்பதா உச்சக்கட்டம் - இல்லவே இல்லை. இவைகளெல்லாமே அர்த்தம் பெறும் - பூரண அர்ப்பணம் இருந்தால். இவைகளெல்லாம் செபமாகும் - உத்தம இருதயம் இருந்தால். அப்பொழுது, நாமல்ல, நம்முள்ளிருந்[illegible] - தந்தையின் உள்ளம் அறிந்தவர், நம்முள்ளம் அறிந்தவர் - நம் தூய ஆவியார் சொல்லொண்ணா பெருமூச்சுக்க[illegible]ாடு செபிப்பா (உரோ. 8: 26). அப்படியானால், ஆரவார செபத்தை அலட்சியமாய் பேசிவிட முடியாது (லூக்.19: 37-40). மௌன செபத்தை, மரண மௌனமாய் இகழ்ந்திட முடியாது (மத். 6:5,6). தூய ஆவியார், அவரவர் உணர்வுகளோடு வெளிப்படுவார். ஆவியிலும் உண்மையிலும் உண்டாகும் இந்தத் தொழுகையை நம் அப்பா தேடிக்கொண்டிருக்கிறார் (யோ.4:23,24).

எது சிறந்த செபம்? மன்னிப்பு வேண்டுவதா? மன்றாடுவதா? புகழ்வதா? நன்றி பகர்வதா? எது சிறந்த செபம் என்ற கேள்விக்கும் பதில் சொல்ல முடியாது. செபம், நம் தூய ஆவியாருக்கு சொந்தமானதாயிற்றே. எல்லா வகைச் செபங்களும் நல்லவையே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கியச் சாளரம்

இச்சாளரம் கலை இலக்கிய ஆர்வலர்களுக்காக திறக்கப்படுகிறது.
கலை இலக்கியச் செய்திகளையும், ஆய்வுகளையும், இன்னும் ஆக்க இலக்கியம் படைப்பது தொடர்பான வழிகாட்டல்களையும் இப்பகுதி தாங்கி வரும். ( பதிப்பாசிரியர்)

## குறுகிய கவிதைகள் ரசனை மிகுந்தவை!

பொதுவாக இன்று புதுக்கவிதைகளை எழுதுகின்றவர்கள் வார்த்தைகளின் சுதந்திரத்தினை கவிதைகளில் காட்டி விடுகின்றார்கள். மிகவும் நீண்ட கவிதையினை எழுதிவிட்டு பெருமூச்சும் விடுகின்றார்கள். ஆனால் நீண்ட கவிதையினை எழுதுவதற்கு மிகவும் குறுகிய நேரம் போதுமானதே. ஒரு அருவிபோல் அதனைக் கொட்டிவிடலாம். மாறாக குறுகிய கவிதை எழுதுவதற்கே மிகவும் நீண்ட நேரம் தேவைப்படுகின்றது. இது ஒரு பெரிய மலையை சிறிய மலையாக வடிவமைக்கும் சிரமத்தினைப் போன்றிருக்கும். குறுகிய கவிதை எழுத நேரமில்லாதவர்களே நீண்ட கவிதைகளை எழுத முடியும். இதன்படி கவிதையின் வடிவத்தில் கஞ்சத்தனம் காட்டினால் அதன் பொருளில் வள்ளத்தனம் மிகுந்திருக்கும்.

இந்தக் கருத்தினை மேலும் தெளிவு கொள்வதில், திருக்குறள், செய்யுள், வெண்பா, குறும்பா, கைக்கூ கவிதை வடிவங்களைக் காணலாம். குறுகிய கவிதைகள் ரசனை மிகுந்தவை. இதற்கு ஆதாரமாய் கவிக்கோ அப்துல் ரகுமான் எழுதிய "நேயர் விருப்பம்" நூலில் உள்ள ஒரு வரிக் கவிதைகளை நோக்கலாம். இரண்டு வரிகளில் திருக்குறள் அமைந்ததை வியந்திருக்கின்றோம். அதையும் மீறிய ஒரு முயற்சி கவிக்கோ அவர்கள் ஒரு வரியில் கவிதை எழுதியிருப்பது. எப்படி நிலவளவு கவிதைக்குள் வானத்தளவு பொருளைக் கொட்டினார். இங்கு தலைப்பும் கவிதையாகிறதோ?

### திருக்குறள்

முப்முலைத் தாய்

தமிழுக்கும் ஒரு தாயாக திருக்குறளை ஒரு வரியில் கவிதையாக்கியிருக்கிறார். காமத்துப்பால், அறப்பால், பொருட்பால் எனும் குறளின் மூன்று உள்ளடக்கங்களையும் மும்முலைகளாக்கி, அதிசயமான ஒரு தாய்மையைக் கண்டெடுக்கிறார் கவிக்கோ. அத்தகைய ரசனையுடைய திருப்தியை எந்தவொரு நீண்ட கவிதையிலும் காணமுடியாது என்பதே உண்மை.

### புத்தகம்

கற்பை இழக்காத பரத்தை.

ஒரு வரிக்கவிதையின் அடுத்த அற்புதம் புத்தகத்தில் உருவெடுக்கின்றது. எத்தனையோ பேர் ஒரு புத்தகத்தைப் புரட்டிப் படிக்கிறார்கள். அத்தனைபேரின் வரிசையிலும் இறுதியாய் நிற்பவன் அப்புத்தகத்தின் புனிதத் தன்மையை புதுமையாகவே ஏற்றுக் கொள்வான் என்பதை ஒரு வரிக்குள் நன்றாக ஊற்றியிருக்கிறார்.

### ஆறு

தண்ணீர் வாக்கியம்.

ஆறு ஒரு சங்கீதம். அது பாடும் ராகங்கள் இனிமைக்கு இனிமை ஊட்டக்கூடியவை. எந்த பாஷையில் ஆற்றின் ராகம் வாசிக்கப்படுகிறது என்பதை கவிக்கோ அவதானமாக காதுகொடுத்துக் கேட்கிறார். தண்ணீர்தான் அதன் பாஷை. ஆறு தண்ணீர் வாக்கியங்களை எழுத்துக் கூட்டி வாசித்துக்கொண்டு பாடுகிறது என்பதை நியாயப்படுத்துகிறார்.

### கண்ணீர்

கண்ணின் ஆபரணம்.

கவிக்கோ அவர்கள் அழுவதை ரசித்திருக்கிறார். துளிமுத்துக்களாய் விழும் கண்ணீர்த் துளிகள் கண்ணணிந்து கொள்ளும் ஆபரணமாகின்றது. கண்ணீர் ஆபரணத்தை கண்கள் அணியும்போது இதயம் அழகு பெறுகின்றது என்று நிறுவுகின்றார். அழுது முடிந்ததும் நமது மனப்பாரம் குறைகிறது அல்லவா? இதனால் இதயம் பொலிவு பெருகிறது. இந்த பொலிவுக்கான அழகினைத் தருவது கண்ணீர் ஆபரணம்தான் என்று மிகவும் ஆழமான கருத்தினை ஒரு வரிச் சுட்டு விரலால் நீட்டிக் காட்டுகிறார்.

இப்படி ஒரு வரிக்குள் எழுத்துக் கற்களால் கவிதைத் தாஜ்மகால் கட்டியிருக்கிறார் கவிக்கோ அவர்கள். இவை மிகவும் ஆழமான கருத்தினைக் கொண்ட அழகான கவிதைகள். இன்றைய புதுக்கவிஞர்கள் இவ்வாறான கவிதைகளில் உள்ள பண்பினை உணர்ந்து அதற்கேற்பவும் தங்கள் கவிதைகளை மிகவும் குறுகிய இரசனை மிகுந்த கவிதைகளாகவும் வடிவமைக்கலாம். அதற்காக அவை ஒரு வரியில்தான் அமைய வேண்டும் என்பதல்ல.

மன்னா சிறுகதை

# கடவுளுக்குரியதை....!

- பி. ஜெலிங்டன் யூலியன்



அன்று வழக்கம் போல வீட்டில் அனைத்து வேலைகளையும் செய்து வைத்துவிட்டு காலைப் பூசைக்குச் செல்லம்மா ஆயத்தமாகிவிட்டாள். கணவன் அந்தோனியும் பிள்ளைகளும் நல்ல நித்திரையாகக் கிடந்தனர். "ஏ... எல்லாரும் எழும்பி முகத்தக் கழுவுங்க. கோப்பிய குடிச்சிட்டு பூசைக்கு வெளிக்கிடுங்க" என்று சத்தமிட்டாள் செல்லம்மா. "இந்த அம்மாவோட ..." என்ற அசட்டலான வார்த்தையுடன் எழுந்தான் செல்லம்மாவின் மகன் தனுஷன். "அண்ணா எழும்பிட்டான்...., எழும்பிட்டான்..... நான்தான் முதல்ல முகம் கழுவுறது" என்று உற்சாக வார்த்தைகளுடன் எழுந்து ஓடினாள் தயாளினி. செல்லம்மாவும் பிள்ளைகளும் பூசைக்குப்போக ஆயத்தமாகி விட்டனர்.

செல்லம்மாவின் கணவன் அந்தோனியோ எழும்பும் நோக்கத்தில் இல்லை. "அப்பா... அப்பா... எழும்பி பூசைக்கு வெளிக்கிடுங்க." என்று தாளமிட்டான் தனுஷன். 'எப்ப பாத்தாலும் கஸ்ரம் கஸ்ரம் என்று கத்துவிங்க. ஆனா கடவுளைத் தேடுறதுக்கு பஞ்சித்தனம். இப்பிடின்ரா கடவுள் எப்பிடி நமக்கு உதவி செய்யப்போறார்..." என்று செல்லம்மா சத்தம்போட்டுவிட்டு கதவை இழுத்துப் பூட்டிவிட்டு பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு பூசைக்கு போய்விட்டாள். "சனியங்கள் தொலைஞ்சுட்டுகள்" என்று முணுமுணுத்துக்கொண்டு அந்தோனி படுக்கையில் இருந்து எழுந்தார். "கடவுளா? கடவுள்....." என்று சொல்லிக்கொண்டு காலைத்தூக்கி வெளியில் வைத்தார். அருகில் கிடந்த கத்தி காலை பதம் பார்த்து விட்டது. இரத்தம் பீறிட்டுப் பாய்ந்தது. ஐயோ ஐயோ என்று மெதுவாக சொல்லி இரத்தம் பட்ட இடத்தில் கோப்பித்தூளை வைத்து அமத்திவிட்டு முகத்தைக் கழுவவம் என்று பற்பொடியை எடுத்துக் கொண்டு பக்கத்து வீட்டுக் கிணற்றடிக்குப் புறப்பட்டார். அதோ வள்...வள்... என்று பக்கத்து வீட்டுக்காரனின் வேட்டை நாய் பாய்ந்து வந்தது. திரும்பி ஓட்டம் பிடித்தார். நாயே நாயே என்று விரட்டி வந்து பக்கத்து வீட்டுக்காரன் நாயைப் பிடித்து விட்டான். மீண்டும் திரும்பிச் சென்று கிணற்றடியில் ஏறினார். நீரை அள்ளினார். முகத்தைக் கழுவிக்கொண்டு திரும்பினார். கிணற்றடிப் பாசி வழுக்கி விட்டது. தொப் என்று கீழே விழுந்தார். "ஆ... ஐயோ.." என்று எழுந்தார். கையைத் திருப்பித் திருப்பி பார்த்தார்.

இரத்தம் வீணாகின்றது என்று துண்டால் ஒரு கட்டுப் போட்டுவிட்டு வீட்டிற்குள் வந்தார். சாதுவான குளிராக இருந்தது. "ஒன்றும் செய்ய முடியாது, ஒரு கோப்பி குடிப்போம்" என்று நினைத்துக்கொண்டு அடுப்படிப் பக்கம் சென்றார். அடுப்பிலிருந்து சூடான நீரை குவளையினுள் ஊற்றினார். நீர் சூடாக இருந்ததினால் அதனை ஆற்றினார். அது தவறுதலாக காலில் விழுந்து விட்டது. அடடா...... ஐயோ...... என்று அலறிக்கொண்டு அடுப்படியில் இருந்து வீட்டிற்குள் ஓடினார். அங்கும் இங்கும் பாய்ந்தார். என்ன செய்வது என்று துடிதுடித்தார். துவண்டார். துணையின்றித் தவித்தார்.

அப்போது படலை துறந்த சத்தம் கேட்டது. மனைவி வருவதைக் கண்டார் அந்தோனி. நடந்தவற்றைக் கூறினார். "கடவுளைத் தேடாத உங்களுக்கு என்னதான் நடக்காது" என்று இரைந்தாள் செல்லம்மா. "உங்க உயிரையும் உடலையும் கடவுள்தான் தந்தார். அவருக்கு கொடுக்க வேண்டிய நேரத்தை அவருக்கு கொடுக்க வேண்டும் எண்டதை இனியெண்டாலும் மறக்காதையுங்க" என்றாள். அந்தோனியை ஏற்றியபடி மகன் தர்சனின் சைக்கில் ஆஸ்பத்திரிக்கு விரைந்தது. அந்தோனியின் உள்ளத்தில் மனைவியின் மந்திர வரிகள் எதிரொலித்துக்கொண்டிருந்தன.

## தொடர் கட்டுரை - அங்கம் 2

# கத்தோலிக்க கலை இலக்கிய பாரம்பரியங்கள்

**- அருள்பணியாளர் விக்ரர் பிலேந்திரன் -**

## பகுதி 1 வியாகுல பிரசங்கம் - பன்முகப்பார்வையில்

### ஆசிரியர் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் (1676 - 1742)

மொழிகளைக் கற்பதில் இவரிடம் காணப்பட்ட திறமையை அறிந்த யோசேவாஸ் அடிகள், இவரை தம்முடன் கண்டி நகரத்திற்கு அழைத்துச் சென்று சிங்கள மொழியைக் கற்பதற்கு வேண்டிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தார். இலங்கையில் வாழ்ந்த கத்தோலிக்கருக்குச் சிங்களத்திலும் தமிழிலும் இலக்கியங்களை ஆக்குவது யோசேவாஸ் அடிகளின் நீண்டகால ஆவலாகவும், முக்கிய தேவையாகவும் இருந்தது. இப்பணியைச் செய்யும் ஆற்றல், திறமை கொண்டவராக கொன்சால்வெஸ் அடிகள் விளங்கியதை அறிந்த யோசேவாஸ் அடிகள் கத்தோலிக்க இலக்கியங்களைத் தமிழிலும் சிங்களத்திலும் ஆக்கும் பொறுப்பை இவரிடம் ஒப்படைத்தார். மொழிகளைக் கற்பதில் இவரிடம் அபரிதமான ஆற்றல் காணப்பட்டது. தமிழ், சிங்களம், ஒல்லாந்தம். போத்துக்கேயம், இஸ்பானியம், இலத்தீன் மொழிகளிலும் அதிகம் தேர்ச்சி பெற்றவரானார். ஒல்லாந்த மொழியை மிகவும் கடினமாகவே கற்கவேண்டியிருந்தது.

பலரின் மனமாற்றத்திற்கும், மதமாற்றத்திற்கும் இவர் காரணமாக இருந்திருக்கின்றார். இதற்கு இவரிடம் காணப்பட்ட ஆன்மீக தாகமும், பேச்சாற்றலும், அறிவுக்கூர்மையும், இவர் ஆக்கிய நூல்களும் துணையாய் அமைந்தன. புதிய கிறிஸ்தவக் குழுமங்களை உருவாக்கியதும் ஏற்கனவே கிறிஸ்தவர்களாக விளங்கியவர்களது விசுவாசத்தை ஆழப்படுத்தியதும் இவரது பணிகளில் குறிப்பிடப்பட வேண்டியவை. அசுத்த ஆவிகளால் பீடிக்கப்பட்டு துன்பப்பட்டவர்கள் பலரை அவற்றிலிருந்து விடுவித்து ஆறுதல் அளித்தார். இவர் ஆபத்தான கொடிய மிருகங்கள் வாழும் காடுகளையும், முதலைகள் வாழும் ஆறுகளையும், ஏரிகளையும், ஆபத்துக்கள் நிறைந்த பாதைகளையும், தனிமையிலே துணிவோடு கடந்து தமது பயணங்களை மேற்கொண்டார். பல சந்தர்ப்பங்களில் ஒல்லாந்த சீர்திருத்தவாத மதகுருமாருடன் மதக்கொள்கைகளின் முரண்பாடுகளின் அடிப்படையில் எழுந்த நீண்ட நேர விவாதங்களை நிகழ்த்தி, கத்தோலிக்க மறைக்கொள்கைகளின் உண்மையையும் மேன்மையையும் எடுத்தியம்பியதோடு, பார்வையாளர்களின் பாராட்டையும் பெற்றார். இவ்வாறான விவாதங்கள் கண்டி மன்னன் நரேந்திரசிங்கன் முன்னிலையிலும் இடம் பெற்றன. இதனால் கொன்சால்வெஸ் அடிகள் மன்னனின் பாராட்டையும் பெருமதிப்பையும் பெற்றார்.

பௌத்த சமயக் கொள்கைகளை விமர்சித்து கொன்சால்வெஸ் அடிகள் எழுதிய நூல், அரச மாளிகையில் பணிபுரிந்த பலருடைய சினத்தைத் தேடிக்கொள்ளக் காரணமாக அமைந்தது. இதனால் கண்டி மன்னன் நரேந்திரசிங்கன் கொன்சால்வெஸ் அடிகளைப் பகைப்பதற்கும், வெறுப்பதற்கும் காரணமான வகையில் பல சதித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதன் விளைவாக கொன்சால்வெஸ் அடிகள் கைது செய்யப்பட்டு. அரச மாளிகைக்கு கொண்டு செல்லப்பட்டு, பலவிதமான அவமானங்களின் மத்தியில் விசாரிக்கப்பட்டார். ஆயினும் விசாரனையின் பின்பு கொன்சால்வெஸ் அடிகள் நிரபராதி என்பதை அறிந்த மன்னன் அவரை விடுவித்தான். அத்தோடு காலக்கிரமத்தில் படிப்படியாக மீண்டும் மன்னனின் நன்மதிப்பையும் நல்லெண்ணத்தையும் பெற்றார்.

பலவித பணிகள் பொறுப்புக்கள் மத்தியிலும் கொன்சால்வெஸ் அடிகள் சிங்களம், தமிழ். போத்துக்கேயம், ஒல்லாந்தம் ஆகிய மொழிகளில் பல நூல்களை ஆக்கியுள்ளார். இவற்றுள் தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் ஆக்கிய நூல்கள் பல கெடுபிடிகள் மத்தியில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்குப் பெரும் துணையாக அமைந்தன. இவ்விலக்கியங்களின் உள்ளடக்கமாக ( விபர விடயமாக ) அடிப்படைச் செபங்கள், பழைய புதிய ஏற்பாட்டு நூல்களில் காணப்படும் முக்கிய சம்பவங்கள், புனிதர்களின் வரலாறு, இறைவனின் அன்னை பற்றிய புதுமைச் சம்பவங்கள், இறையியல் சிந்தனைகள் உரையாடல் வடிவில் எழுதப்பட்டன. திருவருட்சாதனங்களை மையமாகக் கொண்ட 'வாத்தியாரும் குடியானவனும் தர்க்கித்துக் கொண்ட தர்க்கம்' ஏனைய மதங்கள் பற்றிய விடயங்கள் என்பன சிலவாகும். இவர் தமிழில் எழுதிய 15 இலக்கியங்களுள் 'சுவிஷேச விரித்துரை' 'வியாகுல பிரசங்கம்' ஆகிய இரண்டு இலக்கியங்களும் இந்தியாவிலும் இலங்கையிலும் தமிழ் கத்தோலிக்கர் மத்தியில் நீண்ட காலம் ஆழமானதும் பரவலானதுமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. 'வியாகுல பிரசங்கம்' இன்றும் இலங்கையில் பல்வேறு பகுதிகளிலும் பரவி வாழும் கத்தோலிக்கர் மத்தியில் அமோக வரவேற்பையும் ஆன்மீக பயன்பாட்டையும் ஏற்படுத்தி வருகின்றது.

கொன்சால்வெஸ் அடிகள் இலங்கையின் பல பாகங்களிலும் மிகவும் ஆர்வத்துடன் மறையைப் பரப்பினார். ஆரம்பப் பணியை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து தொடர்ந்து மன்னார் மாதோட்டம், முசலி ஆகிய பகுதிகளிலும் சில காலம் பணிபுரிந்து தொடர்ந்து மட்டக்களப்பு திருகோணமலைப் பகுதிகளிலும் பணியாற்றி பின்பு தமது பணிக்காலத்தின் பெரும் பகுதியைத் தென்பகுதியிலும் தென்மேற்குப்பகுதியிலும் கழித்துள்ளார். இவரது பணியின் சிறப்புக் காரணமாக பலர் கத்தோலிக்க மதத்தைத் தழுவியதோடு விசுவாச சோதனையின்போது இதில் உறுதியும் பெற்றனர். இவரது முக்கிய பணித்தளமாக கண்டியும் அதை அண்மிய பகுதிகளும் கொழும்பு, நீர்கொழும்பு; புத்தளம், சிலாபம், போளவத்தை ஆகிய இடங்களும் அவற்றை அண்மிய பகுதிகளும் விளங்கின.

(அடுத்த இதழில் தொடரும்)

## உலக சாதனை படைத்த ஈழத்தமிழன்!



ஈழத்துக் கவிஞர் சோக்கல்லோ சன்முகம் பேச்சுக் கலையில் உலக சாதனை என்ற சிகரத்தை அடைந்துள்ளார். 1960ம் ஆண்டு கியூபாவின் ஜனாதிபதி பிடல் கஸ்ரோ ஐக்கிய நாடுகள் சபையில் ஆற்றிய உரை 4.00 மணி 29 நிமிடங்களாகும். இவ்வாறு தொடர்ச்சியாக ஆற்றப்பட்ட உரையே உலக சாதனையாக இதுவரை இருந்து வந்தது.

ஆனால் சோக்கல்லோ சண்முகம் ஏழு மணி நற்பது நிமிடங்கள் தொடர்ச்சியாக பேசி புதிய சாதனையைப் படைத்தார். இந்த சாதனையில் இன்னுமொரு அம்சம் என்னவெனில் எவ்வித குறிப்புக்களும் இல்லாமல் இயற்கைக் கடன்கள் கழிக்காமல் தொடர்ச்சியாக நின்ற வண்ணம் நிகழ்த்தப்பட்டதாகும். கியூபா ஜனாதிபதியின் சாதனையைவிட மூன்று மணி பதினொரு நிமிடங்கள் மேலதிகமாக பேசிய இவர் இந்தச் சாதனையைப் படைக்க எடுத்துக் கொண்ட பொருள் "நானும் தமிழும்" என்பதாகும்.

யாழ்ப்பாணம் ஏழாலையில் ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்த சோக்கல்லோ சண்முகம் பத்திரிகைத் துறையிலும் முத்திரை பதித்தவர். வில்லிசையிலும், மேடை நாடகங்களிலும் மிகவும் பிரபல்யம் வாய்ந்தவர். இந்தச் சாதனை ஈழத்தமிழர்களுக்கு மட்டும் கிடைத்த கௌரவமல்ல உலகத் தமிழர்களுக்கே கிடைத்த பெருமையாகவே கொள்ளவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பக் குவலயம்



## வாழ்க்கையில் பிரச்சினை என்றால விவாகரத்துதான் அதற்குத் தீர்வா?

இன்றைய காலகட்டத்தில் ஆண் பெண் இருபாலாருமே பல வகையான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துத்தான் வாழ்க்கை எனும் வட்டத்தில் வெற்றியெனும் உச்சியைத் தொடவேண்டியுள்ளது. ஆக, குடும்பம் என்று கூறி அதற்கு ஒரு வரைவிலக்கணம் கொடுக்கவேண்டும் என்றால் இருவரும் இன்பத்திலும் துன்பத்திலும் ஒன்றிணைந்து 'எமது குடும்பம்' என்ற ரீதியில் வாழவேண்டியது அவசியம்.

இந்த ஒழுங்கு முறை முன்னைய தம்பதிகளிடையே மிகுந்த ஆர்வத்துடனும் ஆசையுடனும் கையாளப்பட்டது. இதுதான் வாழ்க்கை என்று கூறிடும் அளவுக்கு தமக்குத் தாமே உள்ளத் தெளிவோடு வாழ்ந்து வந்தவர்கள் நம் முன்னோர். ஆனால் இன்று நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் விஞ்ஞான யுகத்தின் வாழ்க்கையைப் பார்க்கும்பொழுது கணவன் மனைவி இருவரில் யாரேனும் ஒருவர் மௌனமாயிருந்தால்தான் ஓரளவேனும் திருப்தியான வாழ்க்கையை வாழலாம் போலிருக்கின்றது. ஒரு ஆணுக்குத் தான் வீட்டை விட்டு வெளியில் சென்று உழைத்து வருவதுதான் கடமை. தான் வரும்போது வீட்டில் அனைத்து கடமைகளும் சரிவர நடந்து முடிந்திருக்க வேண்டும், வைத்த பொருள் வைத்த இடத்தில் இருக்க வேண்டும், பிள்ளைகள் தொல்லை கொடுக்கக் கூடாது, மனைவி கேள்விகள் எழுப்பக் கூடாது இப்படி பலவாறான தப்பான எண்ணங்கள் தன்னை ஆட்கொண்ட நிலையில்தான் மாலை வீட்டை அடைகின்றான் கணவன்.

பெண்களோ காலை உதயத்திற்கு முன்னே எழுந்து விட்டால் காலை பகலாகி பகல் மாலையாகி மாலை இரவாகிய நிலையிலும் ஓய்வே இன்றி பிள்ளைகளின் வேலைகள், கணவனின் வேலைகள், வீட்டு நிர்வாகக் கடமைகள், பிள்ளைகளின் பாடசாலை வேலைகள், மற்றைய வெளிவேலைகள், வீட்டுப்பாட ஒத்தாசைகள் இப்படித் தொடர்கின்றன. அவள் களைப்படையும் வேளையில், மாலை வீடு வரும் கணவன் தொட்டது பட்டது அனைத்திற்கும் காலில் சுடு நீரூற்றியது போன்று துள்ளிக் குதித்து தான்தான் ராஜா எனக்குக் கீழ்தான் மற்றவை எல்லாம் - மனைவி பிள்ளைகள் எல்லோரும் தான் கீறிய கோட்டில்தான் நடக்க வேண்டும் என்ற தப்பான மனவோட்டத்தில் அடக்கியாள நினைக்கும் போது பெண் மனம் எத்தனை வேதனைப்படும்?

இப்படியான பிரச்சினைகளால் இருவரும் புரிந்துணர்வின்றி வாழ்க்கையில் சுமையோடு வாழும் நிலையே ஏற்படுகின்றது. தொடரான இல்லறம் இப்படி அமையும்போது இருவர் மனதிலும் வெறுப்புணர்ச்சி தானாக எழுந்துவிடுகின்றது. இந்தக் கட்டத்தில் சிறு சிறு செயல்களுக்கும் சண்டையும் சத்தமும் வீட்டை ஆக்கிரமித்துக்கொள்கிறது. பிரச்சினை பெரிதாக நீயா நானா என்ற நிலையில் தமது எதிர்காலம் பற்றியோ பிள்ளைகளின் எதிர்காலம் பற்றியோ சிந்திக்க சந்தர்ப்பம் கிடைக்காத கட்டத்தில் விவாகரத்து எனும் நாடகம் அரங்கேற நாள் குறிக்கப்படுகின்றது. வெளியில் இருப்பவர்கள் உள்ளேயும் உள்ளே இருப்பவர்கள் வெளியேயும் நுழைந்தும் வரவும் ஆசைப்படும் 'விவாகம்' அழகான பூங்கொத்து. இதனை விவாகரத்து என்னும் பெயரில் கசக்கி எறியாமல் இருப்பதற்கு நாம் என்ன செய்யலாம்? முடிந்தவரை மௌனத்தைக் கடைப்பிடிப்பதே மிகச் சிறந்த வழியெனலாம். கணவன் வெளியில் போய் வருவதால் வெயிலின் வெப்பம் தலைக்கு சூடேற்ற கண்கள் பொங்க உள்ளம் கொதிக்க கோபம் அதிகமாகும் என்று சிலர் குற்றங்களை மேம்படுத்திக் கூறுவர்.

திருமணமெனும் அழகான வார்த்தையை அசிங்கப்படுத்தி வாழ்க்கையை குழிக்குள் தள்ளி விடுவது நல்லதல்ல. அடுத்த தலைமுறைக்கும் எமது அழகான வாழ்க்கை ஒரு பாடமாய் அமைய வேண்டும். எந்தச் சந்தர்ப்பத்திலும் பொறுமையிழக்காது அமைதியாயிருந்து எந்த மாதிரியான கஸ்ரங்களையும் சமாளிக்க நாம் முன்வர வேண்டும். எல்லாப் பிரச்சினைகளுக்கும் தைரியமாய் முகம் கொடுத்து ஒரு மூன்றாம் மனிதர் நம் வாழ்க்கையில் குறுக்கிடாத வகையில் நாமே அவற்றை தீர்க்க வேண்டும். காத்திரமான உறுதியும் மனத்தெளிவும் கொண்டு வாழப் பழகிக்கொண்டால் விவாகரத்து எனும் பதத்திற்கு பெண்கள் காரணமில்லை என்று அடித்துக் கூறுமளவிற்கு வாழ்ந்து காட்டலாம். எல்லா ஆண்களும் நிதானமிழப்பவர்களும் இல்லை. யதார்த்தத்தில் எல்லாப் பெண்களும் பொறுமையோடு வாழ்ந்து காட்ட ஆசைப்படுவதுமில்லை. எல்லோருடைய நல்வாழ்வும் அவரவர் திறமையில்தான் தங்கியுள்ளது. இதுதான் உண்மை. விவாகாரத்துகளுக்கு காரணம் கணவன் - மனைவி இருவரின் புரிந்துணர்வு இல்லாமையே என்பதை நாம் புரிந்து கொண்டால் வாழ்க்கையில் பிரச்சினை ஏது? பிரிவுதான் ஏது?

# மருத்துவ மஞ்சரி

## நாட்டு வைத்தியர் நல்லதம்பி




படுக்கையில் இருந்து எழுந்தவுடன் தலைசுற்றுவது போலும் வாந்தி வருவது போலும் இருக்கிறதா? எதையும் சாப்பிட விருப்பமில்லாமலும் இருக்கிறதா? உங்களுக்கு பித்தம் முற்றிவிட்டது என்றுதான் அர்த்தம். சரி, பித்தம் அதிகரித்தால் அதை எப்படிப் போக்குவது? இஞ்சியை சிறு சிறு துண்டுகளாக நறுக்கி அவற்றை சாறு செய்து உரிய வேளையில் பருகிப் பாருங்கள். உங்களுக்கு ஏற்படும் தலைச்சுற்று, வாந்திக் குணமெல்லாம் அகன்று உடலும், மனமும் வழமை நிலைக்கு வந்து விடும் இதையே ஒரு வாரத்திற்கு செய்தால் பித்தமும் நீங்கிவிடும்.

## தோல் நோய்கள்



தோலில் ஏற்படும் சொறி, சிரங்கு, படை, தேமல், தோல்வெடிப்பு, அரிப்பு, தோலின் நிறமாற்றம் ஆகிய எல்லாவற்றிற்கும் காரணம் இரத்தம் கெட்டு விடுவதுதான் இரத்தம் கெடக் காரணம் உணவு முறையில் உள்ள சீர் கேடுகள். உணவு முறையில் உள்ள நச்சுப்பொருள்கள் இரத்தத்தில் கலந்து கொஞ்சம் கொஞ்சமாக இரத்தத்தைத் தூய்மை இழக்கச் செய்கின்றன. அவை தோலில் வெடிப்புக்களை உண்டு பண்ணுகின்றன. கட்டிகளும் சிரங்குகளும் ஏற்பட இவையே காரணமாகின்றன. தோல் நோய் எதுவாயிருப்பினும் சோப்புப் பயன்படுத்துவதை அறவே விட்டுவிட வேண்டும். அறப்புத்தூள், பச்சையற்ற மாவு, கடலை மாவு, தேங்காய்ப் பிஞ்சு ஆகியவற்றைத் தவிர வேறு எதையும் உடலில் தேய்த்துக் குளிக்கக் கூடாது. கத்தரிக்காய், கருவாடு கறி, மசாலாக்கள் ஆகியவற்றையும் கடலெண்ணையில் செய்த பொருட்களையும் சாப்பிடக்கூடாது.

## நமது உணவைப் பற்றி தெரிந்து கொள்வோம்



நாம் அன்றாடம் உணவில் சேர்த்துக் கொள்ளும் பொருட்களின் பயன்கள் பற்றி அறிந்திருப்பதில்லை. யாரேனும் ஏன் அதைச் சேர்க்கின்றீர்கள்? எனக்கேட்டாலும் - தெரியாது, அம்மா சொல்லித் தந்தவ என்றுதான் பதில் சொல்வீர்கள். சில பொருட்களால் ஏற்படும் நன்மைகள் பற்றிப் பார்ப்போமா?

இஞ்சி, மிளகாய், மஞ்சள், வெங்காயம் இவை அனைத்தும் அன்றாடம் உணவில் சேர்க்கப்பட வேண்டியவை. ஏனெனில் இவற்றுக்கு நச்சுத் தன்மையை முறிக்கும் சக்தியுண்டு.

அழற்சி, எரிச்சல், உடல்வீக்கம் என்பன ஏற்படாதவாறு இஞ்சி பாதுகாக்கின்றது. இதயத்திற்கு இரத்தத்தைக் கொண்டு செல்லும் குழாயில், கொழுப்புப் படியாது பாதுகாக்கிறது.

பச்சைமிளகாயை கடித்துச் சாப்பிட்டால் விட்டமீன் 'சி' கிடைக்கும். இவை அனைத்தோடும் ஏலக்காய், மிளகு, பூண்டு என்பவற்றையும் தினந்தோறும் உணவில் சேர்த்து வாருங்கள். இனியென்ன நீங்களும் ஆரோக்கியமானவர்கள்தான். தோலில் ஏற்படும் வெண்புள்ளி, தோல் நோய் என்பவற்றை முள்ளங்கி, பாகற்காய், வல்லாரைக்கீரை. முட்டைக்கோஸ், கரட், எலுமிச்சம்பழம் என்பன விரைவில் குணப்படுத்திவிடும். இவற்றை உண்டால் இரத்தத்தைச் சுத்தப்படுத்திக் கொண்டே இருக்கும். இதனால் குறுகிய காலத்திலேயே நோய் மாறிவிடும்.

## நகம் கடிப்பவர்களே ஜாக்கிரதை




நகம் கடிப்பதால் பற்களுக்கு பாதிப்பு ஏற்படுகின்றது. பற்களின் வேர்கள் அழிந்து விடுகின்றன. விரல்களில் உள்ள அழுக்கு மூலம் வாய் வழியாக தொற்று நோய் பரவுகிறது. அதோடு சிலருக்கு பல்வரிசை சீராக இல்லாமல் போவதற்கும் நகம் கடிப்பது காரணமாக அமைந்து விடுகின்றது. அமெரிக்காவில் ஒன்பது வயது சிறுவன் எந்நேரமும் நகம் கடித்துக் கொண்டிருந்ததால் கடிபட்ட நகத்தின் துண்டு ஒன்று பல்லின் வேரில் சிக்கி அந்தப் பல்லையே விளைவைத்து விட்டது.

# பெண்கள் உலகம்

## குழந்தை வளர்ப்பில் தாயின் பங்கு

மேலைத்தேசக் கலாச்சாரம், இங்கு வேகமாகப் பரவிவரும் இக்காலகட்டத்தில் எமது சமூகத்தில் மூல வேரான குடும்ப அமைப்பு குலைந்து விடுமோ என்ற அச்சம் நிலவிவருகின்றது. அதற்காக மேலைத்தேசக் கலாச்சாரம் இழிவானது என்று எண்ண முடியாது. ஒவ்வொரு நாட்டுக்கும் அதன் கலாச்சாரம் உயர்வானது. குடும்ப அமைப்பு உடைவதனால் பாதிப்படையப்போவது இளம் தலைமுறையினரே. கணவன், மனைவி இருவரும் வேலைக்கு போகவேண்டியது இன்றைய காலத்தின் கட்டாயம். குழந்தைப் பேற்றிற்காக தாய்க்கு விடுமுறை வழங்குவதைப்போல குழந்தையைப் பராமரிப்பதற்கு தந்தைக்கு பட்டேனிட்டி விடுமுறை வழங்கும் வழக்கம் மேலை நாடுகளில் இருந்து வருகின்றது.

குழந்தை நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே என்று கூறுகின்றது எமது கலாசாரம். ஆனால் குழந்தையின் வளர்ப்பில் அன்னை, தந்தை இருவரும் சம பங்கினை வகிக்க முடியுமென்கின்றனர் மேலை நாட்டு அறிஞர்கள்.



தந்தையைவிட தாய்க்குத்தான் பிள்ளைகள் குறித்து எல்லா விசயங்களும் தெரியும். அதனால் தகப்பனின் பங்கு முக்கியமில்லை தாயின் பங்குதான் தேவையென்று கூறமுடியாது. பிள்ளைகளைப்பற்றி தாய்தான் அதிகளவில் அறிந்திருக்கிறாள். ஆகையால் எந்தக் குடும்பத்தில் கணவனும் மனைவியுமாக இணைந்து பிள்ளைகளின் வளர்ப்பில் அக்கறை எடுத்துக் கொள்கிறார்களோ அந்தக் குடும்பத்தில் பிரச்சினைகள் வருவது குறைவு. அப்படி வந்தாலும் சுமூகமாக தீர்க்கும் ஆற்றலும் அவர்களுக்கு உண்டு. இன்று பணம் சம்பாதிக்க வேண்டும் பிள்ளைகளை நல்ல நிலைக்கு கொண்டுவரவேண்டுமென்று இருவருமே தொழிலுக்குச் செல்கின்றனர். காலையில் எழுந்தால் மாலைவரை இயந்திரமாகவே இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். சில தாய்மார்கள் பிள்ளைகளை கணவனிடம் ஒப்படைத்து விட்டு தாம் உழைக்கச் செல்கின்றனர்.

இருவரும் தொழில் செய்வது காலத்தின் தேவை. இருந்தும் அவர்கள் நோக்கம் பணமாகவே மாறிவிடுவதால் எந்தப்பிள்ளைகளுக்காக பாடுபடுகின்றோம் என்று சொல்லுகிறார்களோ அந்தப் பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பாழடித்துவிடுகின்றனர்.

ஒரு தகப்பன் எவ்வளவுதான் சீராட்டி வளர்த்தாலும், தாயின் அரவணைப்பு, அன்பு இல்லாத பட்சத்தில் அந்தப்பிள்ளை மனதளவில் கொஞ்சம், கொஞ்சமாக பாதிக்கப்பட்டு நாளடைவில் விபரீதமான பாதைகளில் போகக்கூடிய சந்தர்ப்பங்கள் உருவாகின்றன. பிள்ளைகளோடு இருவருக்கும் ஒரு சுமூகமான நட்பு இருக்க வேண்டும். இது அநேக குடும்பங்களில் காணப்படுவது குறைவு. கணவன், மனைவி சேர்ந்து அமர்ந்து சாப்பிடுவது, பேசுவது இல்லை. பிள்ளைகளை இருவருமாக சேர்ந்து கடற்கரை, பொழுதுபோக்கு இடங்கள் திருவிழாவிற்கு அழைத்துச்செல்வதில்லை. இதனால் அநேகமான இளைய தலைமுறைகள் தாங்களே தங்களுக்குத் தேவையானதை திருட்டுத் தனமாக தேடி நேரத்தையும் பொழுதையும் கழிக்கின்றனர். பெற்றோரிடம் எதிர்பார்க்கும் பாசம் அரவணைப்பு கிடைக்காத பட்சத்தில் மனோரீதியாகவும் தாக்கத்துக்குள்ளாகி விடுகின்றனர். அநேக வாலிப வயதுப் பிள்ளைகள் முரட்டுக் குணம் நிறைந்தவர்களாகவும், எடுத்ததற்கெல்லாம் சண்டைகளிலும் இறங்கி விடுகின்றனர். காரணம் தாயின் பாசம் போதியளவு இல்லை. மனதில் ஒருவித ஏக்கம், வெறுப்பு! இது இவர்களை சமுதாயத்தில் நல்லவர்களாக வாழ விடாது விரட்டுவதால் எத்தனை விதமான பயங்கரவாத செயல்கள் இன்று நாடுகளில் தலைவிரித்து ஆடிக்கொண்டிருக்கின்றன.

பெண் பிள்ளையாக இருந்தால் அவளது உடல் ரீதியான மாற்றங்கள், பாலியல் சம்மந்தமான பிரச்சினைகளை தாயுடன் மனம்விட்டுப் பேசக்கூடியதாக இருக்கும். இல்லையேல் அந்தப் பிள்ளை அன்புக்காக ஏங்கி தன் தேவைகளை பிழையான நண்பர்கள் மூலம் கற்றுக்கொண்டு விபரீதமான விளைவுகளை தேடிக்கொள்ளும். தாய்க்கு அநேக பொறுப்புக்கள் உண்டு. அதில் முக்கியமானதுதான் பிள்ளைகளின் குறை நிறைகளை அறிந்து அதற்கேற்ப நல்ல பிரஜைகளாக வளர்ப்பது.



நோயாளி : இது என்ன? "சா" வுக்கு முன் "சா" வுக்குப் பின் என்று எழுதியிருக்கே?

நேர்ஸ் : பயப்படாதீங்க. 'சாப்பாட்டுக்கு முன்' 'சாப்பாட்டுக்கு பின்' என்கிறதைதான் ஷோர்ட்டா எழுதியிருக்கேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் அரங்கம்

உரத்த சிந்தனை – உரைப்பது – ஸ்நாபகன்

## உறுதி மொழிகள்
## இம்முறையாவது நிறைவேற்றப்படுமா?

தமிழ் அரசியல் கைதிகள் தம்மை விடுதலை செய்யக்கோரி சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பதும் பின்னர் தற்காலிகமாக கைவிடுவதும் காலத்திற்கு காலம் அவ்வப்போது நடைபெற்று வருகின்றது. ஆனால் இம்முறை அதாவது 01.10.2002 அன்று ஆரம்பித்த உண்ணாவிரத போராட்டம் தமது விடுதலையை உறுதிப்படுத்தாதவரை கைவிடப்படமாட்டாது என்றே கைதிகளினால் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்காகவே அவர்கள் அமைச்சர் மிலிந்த மொறகொட அரச பிரதிநிதியாக நேரில் வரவேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தனர். அவ்வாறு கைதிகள் கோரியதற்கு காரணமுண்டு. ஏற்கனவே பல உண்ணாவிரதப் போராட்டங்களை தமிழ் அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் சென்று ஏதோ ஒரு உறுதிமொழியை வழங்கி இடைநிறுத்தி வைத்தார்கள். ஆனால் எதுவும் நடக்கவில்லை. உறுதிமொழி வழங்கி உண்ணாவிரத போராட்டங்களை நிறுத்திய தமிழ் அமைச்சர்களும் எம்.பி மாரும் ஒப்பாசாரத்திற்கேனும் சிறைச்சாலைப் பக்கம் சென்றதில்லை. இதனால் கைதிகளுக்கு வெறுப்பும் சலிப்பும் கோபமும் ஏற்பட்டது. இதனாலேதான் தமிழ் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் என்பதற்கு அப்பால் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ஒருவர் அரச பிரதிநிதியாக வரவேண்டும் என்ற கோரிக்கையை கைதிகள் முன்வைத்திருக்கிறார்கள் என்பதை நாம் அறிந்துகொள்ள முடியும்.


அத்துடன் தற்போது விடுதலைப்புலிகளுடன் இடம்பெறும் சமாதானப் பேச்சுவார்த்தையின் முக்கிய பிரதிநிதியாக அமைச்சர் மிலிந்த மொறகொட திகழுவதினால் தமது விடுதலை தொடர்பான அவரின் உறுதிமொழி சாத்தியப்படக்கூடும் என கைதிகள் எண்ணியிருக்கலாம்.

கைதிகள் அவ்வாறு எண்ணியதில் தவறு இல்லை. ஏனெனில் அமைச்சர் மிலிந்த மொறகொட கடந்த பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் வெற்றிபெற்றதற்கு தமிழ் மக்களின் வாக்குகளும் ஒரு காரணம்.

ஆகவேதான் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையிலும் அமைச்சர் மிலிந்த மொறகொடவிற்கு பங்கு இருக்கின்றது எனலாம். சரி, கைதிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க அமைச்சர் மிலிந்த மொறகொட சிறைச்சாலைக்கு சென்றார். உறுதிமொழி வழங்கினார். ஒரு மாதத்திற்குள் வருவேன் என்றார். உண்ணாவிரதத்தை தற்காலிகமாக நிறுத்தினார். அடுத்த கட்ட நடவடிக்கை என்ன? அதனைவிட அமைச்சர் அங்கு வழங்கிய உறுதிமொழிதான் என்ன? படிப்படியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். பிரதமரின் சமாதான முயற்சியின் பிரகாரம் எல்லாமே சாத்தியப்படும் என்று கூறினார். அத்துடன் உங்கள் விடுதலை தொடர்பாக உறுதியான வாக்குறுதியை வழங்கமுடியாது என்றும் அமைச்சர் கைதிகளிடம் கூறினார். இது வழமையான வாய் மொழிதான். உங்கள் வழக்குகள் அனைத்தும் வாபஸ் பெறப்படும். அரசு புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி தமிழ் அரசியல் கைதிகள் சிறையில் அடைக்கப்பட்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை என அமைச்சர் அங்கு கூறமுடியாமல் போனதற்கு காரணம் என்ன? கைதிகளின் விடுதலையில் சட்டச்சிக்கல் உள்ளது என்று சட்டமா அதிபர் கூறுகின்றார். அவ்வாறே நீதியமைச்சரும் கூறுகின்றார்.

அது என்ன சட்டச்சிக்கல்? கைதிப்பரிமாற்றத்தின்போது விடுதலை செய்யப்பட்ட 11 விடுதலைப்புலி உறுப்பினர்களும் எந்த அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டார்கள்? அதற்கு சட்டச் சிக்கல் இல்லையா?

கட்சி அரசியலுக்கு அப்பால் ஒரு சகவாழ்வு அரசியல் ஏற்பட்டாலன்றி நாட்டைச் சீரழிவிலிருந்து காப்பது துர்லாபம் – செய்தி விமர்சனம்.




நன்றி தினக்குரல்

## வரலாற்று மேற்கோள்



"மூன்றாவது உலக மகா யுத்தமொன்று மூளும் பட்சத்தில், அதில் அணுவாயுதங்கள் பயன்படுத்தப்படுமேயானால், நான்காவது உலக மகாயுத்தத்தில் அம்பும் வில்லும் கொண்டுதான் சண்டையிட வேண்டிருக்கும்".
- ஏர்ள் மவுன் பேட்டன்

# மன்னார்ச் செய்திகள்

### உதை பந்தாட்டப் போட்டியில் சவேரியார் ஆண்கள் கல்லூரி சாதனை

இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் 2002ம் ஆண்டுக்கான மைலோ கிண்ணப்போட்டியின் 1ம் சுற்றில் 14,16,18, வயதுப் பிரிவினர்க்கான போட்டிகள் யாவற்றிலும் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை உதைபந்தாட்ட அணியினர் முதலிடங்களைப் பெற்று Group champion ஆக தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இவர்களின் இம் மூன்று அணியும் அடுத்த மாதம் தேசிய மட்டப் போட்டிக்கு செல்லவுள்ளார்கள். கடந்த ஆண்டில் 18வயதுப் பிரிவு அணியினர் தேசிய மட்டத்தில் மைலோ கிண்ணத்தை சுவீகரித்து சாதனை படைத்தது குறிப்பிடத்தக்கது. 1999ம் ஆண்டுமுதல் 2002ஆம் ஆண்டுவரை தேசிய மட்டத்தில் தொடர்ந்தும் 1ம்,2ம் இடங்களை இக்கல்லூரி பெற்று மாவட்டத்துக்கு பெருமை தேடித் தந்துகொண்டிருக்கின்றது. கடந்த மாதம் இலங்கை கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட தேசிய மட்ட உதைபந்தாட்டப் போட்டியில் இக்கல்லூரியின் 17வது பிரிவு அணியினர் தேசிய மட்டத்தில் 2ம் இடத்தைப் பெற்றதும் குறிப்பிடத்தக்கது. இவ்வணிகளின் பயிற்றுவிப்பாளர் திரு பி. ஞானராஜ் ஆவார்.

### மன்னாரில் வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரத்திற்கு புலிகள் கண்டனம்

எல்லாளன் படையணி என்ற பெயரில் முஸ்லிம்களிடம் வெறுப்பையும், குரோத உணர்வையும் தூண்டும் வகையில் தீய சக்திகளால் மன்னாரில் வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரம் தொடர்பாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வன்மையான கண்டனத்தை தெரிவித்துள்ளது. கடந்த செப்ரம்பர் 15ம் திகதி இவ்வாறான ஒரு துண்டுப்பிரசுரம் மன்னாரில் சில பகுதிகளில் விநியோகிக்கப்பட்டிருந்தது.

### மன்னார் மாவட்ட நீதிமன்றங்களை ஒரே கட்டிடத்தில் இயங்க வைக்க முடிவு

மன்னார் மாவட்ட நீதிமன்றங்களை ஒரே கட்டிடத்தில் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வன்னி புனர்வாழ்வு அமைச்சர் நூர்டீன் மசூர் இது தொடர்பாக நீதி, சட்ட மறுசீரமைப்பு தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் டபிள்யூ.ஜே.எம். லொக்கு பண்டாரவிடம் விடுத்த வேண்டுகோளையடுத்து இதற்கான இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தமிழக மீனவர்கள் பேசாலை மீனவர்களால் தடுத்து வைப்பு

மன்னார் கடற்பரப்பினுள் சட்ட விரோதமாக நுழைந்து கடற்தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது கடந்த 18.09.2002 அன்று இரவு பேசாலை மீனவர்களினால் சுற்றி வளைக்கப்பட்ட நூற்றுக்கு மேற்பட்ட தமிழக மீனவர்களும் அவர்களது 25 படகுகளும், கொழும்பிலுள்ள இந்திய தூதரக அதிகாரியின் உத்தரவாதத்தையடுத்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அண்மைக் காலங்களாக தமிழக மீனவர்கள் நூற்றுக்கணக்கில் தங்கள் படகுகளுடன் கச்சதீவு கடல் எல்லையையும் தாண்டி மன்னார் கடற்பரப்பினுள் நுழைந்து மீன்பிடித்து வந்தது வழமையான செயலாக இருந்து வந்தது. இதனால் பாதிக்கப்பட்ட பேசாலை மீனவர்களே கடந்த 18.09.2002 இரவு இப்பகுதியில் மீன்பிடித்துக்கொண்டிருந்த நூற்றுக்கும் மேற்பட்ட தமிழக மீனவர்களை சுற்றி வளைத்துப் பிடித்து பேசாலை கடற்கரையோரத்திலுள்ள மீனவ சங்க கட்டிடம் ஒன்றில் தடுத்துவைத்திருந்தனர்.

# பங்குத் தள சங்கதிகள்

### கீளியன் குடியிருப்பில் நாட்டுக்கூத்து

கீளியன்குடியிருப்புப் பங்கின் இரண்டாம் ஆண்டு நிறைவையொட்டி 30. 09. 2002 அன்று பங்குத் தந்தை சீமான் அடிகளாரின் தலைமையில் பங்கு மக்களால் நாட்டுக் கூத்து நாடகம் ஒன்று அரங்கேற்றப்பட்டது. ஈழத்திரு நாட்டின் கத்தோலிக்க விசுவாசத்தை வித்திட்ட புனித பிரான்சிஸ்கு சவேரியார் வாழ்க்கை வரலாறு வாசாப்பு நாடகமே இங்கு மேடையேற்றப்பட்டது. மன்னார் ஆயர் அவர்கள் இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

### தட்சனா மடுவில் மறைக்கல்வி தினம்

2002ம் ஆண்டிற்கான மறைக்கல்வி தினம் தட்சனாமருதமடுப் பங்கில் 23.09.2002 அன்று வேதாகம எழுந்தேற்றத்துடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது. 28.09.2002 அன்று சனிக்கிழமை மறைக்கல்வி தினத்தையொட்டி கலைநிகழ்வுகள் நடைபெற்றன.

29.09.2002 அன்று காலை 7.30 மணிக்கு மறைக்கல்வி மாணவர்கள், பெற்றோர்கள் பவனியாக சென்று வேதாகமத்திற்கு மலர் தூவி மரியாதை அளித்தனர். அதைத்தொடர்ந்து திருப்பலி இடம்பெற்றது. திருப்பலி முடிவில் மறைசார்ந்த அறிவைப் பெறுமுகமாக கண்காட்சிகளும் இடம் பெற்றன.

பொ. சுவேந்திரன்
மறைவாழ்வுப் பணியாளர், தற்சனாமருதமடு

### அடம்பன் வியாகுல மாதா திருவிழா

மன்னார் மறைமாவட்டத்தின் பழம்பெரும் பங்குகளில் ஒன்றான அடம்பன் புனித வியாகுல அன்னையின் ஆலயத் திருவிழா சென்ற 15. 09. 2002ல் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. சுமார் 12 வருடங்களின்பின் இந்த ஆலயமும் சுற்றுப் புறமும் மக்களால் துப்பரவு செய்யப்பட்டு விழா கொண்டாடப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

தகவல்: அடம்பன் ஜேம்ஸ் துரம்,
தலைமன்னார்.

### கோவில் புதுக்குள ஆலய புனரமைப்பு

வவுனியா பங்கில உள்ள புனித செபஸ்ரியார் ஆலயம் அருட்தந்தை பிலிப் பொன்னையா அவர்களால் 1970ம் ஆண்டில் கட்டப்பட்டது. இவ்வாலயம் தெற்கு இலுப்பைக்குள மக்களைக் கூடுதலாகக் கொண்டிருந்தபோதும் இதன் அமைவிடம் கோவில் புதுக்குளம் ஆகும். கடந்த 32 வருடங்களாக அதே நிலையிலேயே இருந்துவந்துள்ளது. ஆனால் இவ்வருடம் இவ்வாலயத்தைப் புனரமைப்பதற்கான ஆரம்பக் கட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

திருமதி கலிஸ்ரா ரவீந்திரன்,
புனித செபஸ்ரியார் ஆலயம், வுவனியா.

### பெரிய முறிப்பு ஆலயத் திருவிழா

கற்கடந்தகுளம் பங்கைச் சேர்ந்த பெரிய முறிப்பு புனித சிந்தாத்திரை மாதா ஆலயத் திருவிழா 22.09.2002 அன்று சிறப்பாக இடம்பெற்றது. திருநாள் திருப்பலியை பங்குத்தந்தை அருட்தந்தை ஸ்ரீபன் ராஜா அடிகளார் ஒப்புக்கொடுத்தார். அன்னையின் திருச்சுரூபப் பவனியுடன் திருநாள் திருப்பலி முடிவடைந்தது.

தகவல் : திருமதி. தே.ஜெயராணி,
பெரியமுறிப்பு.

### புதுக்கமத்தில் திருச்செல்வர் நாட்டுக் கூத்து

நானாட்டான் பங்கைச் சேர்ந்த புதுக்கமம் என்னும் கிராமத்தில் கடந்த 2002 .09. 16ம் திகதி தொடக்கம் 18ம் திகதிவரை மூன்று இரவுகளாக திருச்செல்வர் நாட்டுக்கூத்து இடம் பெற்றது. இவ் நாட்டுக்கூத்தானது 1954ம் ஆண்டு அரங்கேற்றியதின் பிற்பாடு 2002ம் ஆண்டு மீளவும் அரங்கேற்றம் செய்யப்பட்டுள்ளது. இதற்கு ஊர் மக்களின் இடைவிடா முயற்சியே காரணமாகும். நாடகத்தின் கடைசிநாளில் மன்னார் ஆயர் அவர்களின் வருகை, பங்குத் தந்தையர்களின் பிரசன்னம் ஊர்மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

தகவல், ம. சவிரி.

### மாவிலங்கேணியில் முன்பள்ளித் திறப்பு விழாவும் ஆலயத் திருவிழாவும்



அளவக்கைப் பங்கைச் சேர்ந்த மாவிலங்கேணியில் முன்பள்ளிக் கட்டிடத்திறப்பு விழா 2002 புரட்டாசி 8ந் திகதி இடம்பெற்றது. வாழ்வுதயத்தின் ஆதரவுடன் பங்குத்தந்தை அருட்திரு. பெனோ அலெக்சாண்டர் அடிகளாரின் தலைமையில் இக்கிராம மக்கள் ஒன்றிணைந்து இக்கட்டிடத்தை சிறப்பாகக் கட்டிமுடித்துள்ளனர்.

இக்கட்டிடத்தை பெருந்திரளான மக்கள் முன்னிலையில் மன்னார் வாழ்வுதய இயக்குனர் அருட்திரு. ச. யேசுராஜா அவர்கள் ஆசீர்வதித்து திறந்து வைப்பதை முதலாவது படத்தில் காண்கிறீர்கள். அளவக்கை பங்கில் உள்ள மாவிலங்கேணி கிராமத்தில் புரட்டாதி 8ம் திகதி புனித அடைக்கல அன்னையின் திருவிழா மிக சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. திருவிழாத் திருப்பலியை அருட்பணியாளர்கள் டலிமா பங்குத் தந்தை பெனோ அடிகளார் ஆகியோர் ஒப்புக்கொடுத்தனர். அருட்பணியாளர் டலிமா அவர்கள் திருச்சுரூப ஆசீர் வழங்குவதை இரண்டாவது படத்தில் காண்கிறீர்கள்.

தகவல்: லி.அசுந்தா, மாவிலங்கேணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர் பொழிவு

## உண்மைதானா?

### சிந்தனை – சிரிப்பு

ஒரு பிரெஞ்சுக்காரன் தனிமையில் இருந்தால் காதல் சிந்தனையில் மூழ்கி இருப்பான். இரண்டு பிரெஞ்சுக்காரர்கள் சேர்ந்தால் ஒரு அரசியல் கட்சியை ஆரம்பிப்பார்கள். மூன்று பிரெஞ்சுக்காரர்கள் ஒன்று சேர்ந்தால் ஒரு மந்திரி சபையைக் கவிழ்த்து விடுவார்கள்.

ஒரு ஜேர்மனியன் தனிமையில் இருந்தால் ஆராட்சியில் ஈடுபட்டிருப்பான். இரண்டுபேர் சேர்ந்தால் படைதிரட்டுவார்கள். மூன்றுபேர் சேர்ந்தால் அயல்நாட்டின் மீது படையெடுப்பார்கள்.

ஒரு இலங்கையன் தனியாக இருந்தால் எந்த வேலையும் செய்யாது சும்மா இருப்பான். இருவர் சேர்ந்தால் மூன்றாவது மனிதனுடைய குறைநிறைகளை திட்டித்தீர்ப்பார்கள். பத்துப்பேருக்கு மேல் இருந்தால் சங்கம் அமைத்து தலைவரைத் தெரிவு செய்வார்கள்.

இருபது பேருக்கு மேல் சேர்ந்துவிட்டால் அந்தத் தலைவரை எப்படி பதவியில் இருந்து இறக்கலாம் எனத் திட்டம் தீட்டுவார்கள். உண்மைதானா?



## பொன்மொழிகள்

தியானமும் வழிபாடும் தங்க நகைகளைப்போல இரும்புப் பெட்டியில் பூட்டப்பட வேண்டியவையல்ல. ஒவ்வொருவர் செவியிலும் பதிக்கப்பட வேண்டிய ஒளிக் கற்கள்.

காந்தி ஜீ

ஒவ்வொரு பறவைக்கும் ஆண்டவன் அமுது படைக்கின்றான். ஆனால் அந்த உணவைப் பறவையின் கூடு தேடி அவர் கொண்டு சென்று ஊட்டுவதில்லை.

ஹாலண்ட்

இறைவனுக்கும் பெண்களுக்கும் ஒரு பொதுக் குணமுண்டு இருவருமே துன்பப்படுவோரின் பக்கம் சாய்ந்து விடுவார்கள்.

பால்லக்

தொகுப்பு : க. அடைக்கலம்,
புனித வளனார் அ.ம.தி குருமடம், யாழ்ப்பாணம்.

## தன் வினை தன்னைச் சுடும் (சிறுகதை)

ஒரு மூதாட்டி பார்வை இல்லாது மிகவும் துன்பப்படுகின்றாள். இறுதியில் ஒரு மருத்துவரிடம் காட்டுகிறாள். தன்னைக் குணப்படுத்தினால் பெரும் பணம் தருவதாகவும் வாக்குக் கொடுக்கின்றாள். குணம் இல்லையேல் பணம் இல்லை என்கிறாள்.

நாள் தோறும் அந்த மருத்துவர் மூதாட்டியின் வீட்டுக்குச் சென்று மருத்துவம் செய்யத் தொடங்கினார். நாள் தோறும் மூதாட்டியின் வீட்டிற்கு வரும் மருத்துவர் மூதாட்டியின் மேசை, நாற்காலி போன்ற பொருட்களைக் கவர எண்ணுகின்றார். அவர் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பொருளாக அபகரித்துச் செல்கின்றார். மூதாட்டிக்குச் சுகம் ஏற்படுவதை மிகவும் தாமதப்படுத்தினார். இறுதியில் மூதாட்டி பார்வை பெறுகின்றாள். மருத்துவர் தமக்குச் சேர வேண்டிய பணத்தைக் கேட்கின்றார். மூதாட்டி பணம் தர மறுக்கிறாள். தனக்கு இன்னும் சரிவரக் குணம் ஏற்படவில்லை என்கிறாள். மறுத்துவர் நீதிமன்றத்தில் முறையிடுகின்றார். அவ்வேளை பணம் கொடுக்காததிற்கு என்ன காரணம் என்று நீதிபதி மூதாட்டியை வினாவுகின்றார். தனக்கு இன்னும் சரிவரக் குணம் ஏற்படவில்லை என்றும் தன் வீட்டிலிருந்த மரச் சாமான்களைக் காணவில்லை. அவை என் கண்ணுக்குப் புலப்படவில்லை என்றும் மூதாட்டி பதில் கூறுகின்றாள். உண்மையை உணர்ந்த நீதிபதி மூதாட்டிக்கு ஆதரவாகத் தீர்ப்பு வழங்கினார்.

ஞா. மரியகிருதா, அன்பின் சகோதரிகள் இல்லம்,
கோமரசன் குளம், வவுனியா.

# கவிதைக் களம்

## இளமைப் பருவம்

இளமைப் பருவம்
இதயத்தை வருடுகின்ற இளவேனிற் பருவம்
எல்லையற்ற சுகந்தத்தில்
மனதை கொள்ளை கொள்ள
வைகறைச் சூத்திரம் தெரிந்த பருவம் இது.
வசந்த காலத்திற்கு
வாசல் அமைக்கின்ற வானவில்லில்,
இளமை தனது இறக்கைகளுக்கு
வண்ணம் எடுத்துக் கொண்டு
வாலிபத்தை பனித்துளியைப்போல
பளபளப்பாக்கி விடுகிறது.

பனித்துளிகள் பார்ப்பதற்கு பளபளப்பானவை
ஆனால் அதன் நிரந்தரம் சில நிமிடங்கள்
மட்டுமே உத்தரவாதம்.
அது மாதிரித்தான், இளமைகூட!
சில வருடங்களுக்கு மட்டுமே உத்தரவாதம்.
பனித்துளிகள் நிமிடங்களில் நிற்கிற
வாழ்க்கைச் சாத்தியம் கொண்டது
இளமை சில வருடங்களில் நிற்கின்ற
வாழ்க்கைச் சாத்தியம் கொண்டது
சில வருடங்கள் மட்டுமே இறக்கைகளை
காட்டிக் கொள்கின்ற இளமை
ஒரு மனிதனின் பூரணத்துவத்திற்கான
அடித்தளத்தையும் தரும் அதே சமயம்,
அரை குறையான அடையாளத்தின்
அடிச் சுவட்டையும் தரும்.
இளைஞர்களே!
முள்ளில் மோதுவதால் தென்றல் தேம்பாது
இந்த அறிவுரைகளைப் படிப்பதால்
உன் உணர்வுகள் காயப்படாது.
அறிவு என்பது பெற்றுக் கொள்வது
அனுபவம் என்பது கற்றுக் கொள்வது
இளைய பருவம்
பெற்றுக்கொள்ளவும் வேண்டும்,
அதே சமயம் கற்றுக்கொள்ளவும் வேண்டும்.

அருட்சகோதரி றாஜேஸ்,
திருக்குடும்ப கன்னியர் இல்லம்,
தலைமன்னார்.

## ஒருமைப்பாடு

தேசம் வளர்ப்போம் வாருங்கள்
சிந்தை இணைந்தே சேருங்கள்
நேசம் சொல்லும் வழியெல்லாம்
தேசம் செழிக்கும் வழியாகும்!

பிறந்த மதத்தின் பெருமையினைப்
பேசிப் பேசிக் கழிக்காமல்
சிறந்த பணிகள் செய்திடுவோம்
செயலில் வெற்றி எய்திடுவோம் !

ஒற்றுமையாக வாழ வழி
வேதமே சிறந்த வழி
வேதம் கூறும் வழியினை
கேட்டு வாழ்வதே ஒருமைப்பாடு!

ஒருமைப்பாட்டால் வேத நலம்
உயர்ந்து வளரும் நாள் தோறும்
ஒருமைப்பாடே நல்ல வழி
ஒருமைப்பாடே வெல்லும் வழி!

ஜெனிற்றா செபமாலை
No – 145, ஆண்டு - 13
பெரிய பண்டிவிரிச்சான்.

## முரண்பாடு

"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்"
தமிழ் அழகாய் சொல்லித்தர
எண்ணங்கள் எல்லாமே உயர்வாக
மிக உயர்வாக!
செயல்கள்................?
சிந்தனைக்கும் - சொல்லுக்கும்
சொல்லுக்கும் - செயலுக்கும்
இம்மியளவு இடைவெளியின்றி
வாழ்ந்து காட்டிய யேசுவே
என் பக்கம் பார்! கருணையோடு பார்!
உன்னை அன்பு செய்கிறேன்
உன் வார்த்தைகளை வியக்கின்றேன்
அதன் வழி வாழ ஆசைப்படுகிறேன்
வில்லங்கமே அங்கேதான்
ஆலயத்துக்குள்ளே சமாதானம் சொல்வது
எத்தனை சுலபம்....!
ஒன்று - இரண்டு உடற்பயிற்சி
கட்டளைகளை
செய்து காட்டுகிற பள்ளிச் சிறுமிபோல
"டக்டக்" சமாதானம் முடிந்து விடுகிறது
மூன்று நான்கு இல்லாமலேயே
வெளியே .............. முடிகிறதா?

வீட்டுக்குள்ளேயே
விட்டுக் கொடுக்க முடியவில்லையே
வீதியைப் பற்றி வேறென்ன பேச்சு?
அம்மா........... குறைவாகப் பேசி
நிறைவாக செயலாற்றிய தேவதாயே!
ஒளியாக மிளிர நினைக்கின்ற மனம்
திரியாக எரிய மறுக்கின்ற குணம்
சிந்தனைக்கும் செயலுக்கும்
சம்பந்தம் இல்லாமல்
உன் எளிமையை ஆராதிக்கிறேன்!
ஆடம்பரமில்லா உன் அமைதியை
அன்பு செய்கிறேன் ஆனாலும்
கன்னிமரியே என் கனவில் - நீ கூட
காஞ்சிபுரத்தோடுதான்.
முரண்பாடுகளின் மொத்த வடிவமா மனிதன்?
இறைவனோடு உடன்பட்டு தன்னோடு
முரண்பட்டு
இறைவா மாற்று
வார்த்தையின்படியே வாழ்வு
சிந்தனை போலவே செயல்
வரம் தா! முரண்பாடு உடைபட
நீ என் உடன் வா! உடன் வா!

ஜெயா பாலாஜி, முருங்கன்.

## நண்பா சற்று நில்!

சங்க காலத்தில் சரிந்து நிற்கும் நண்பா
சமீப காலச் சொர்ப்பனங்கள் உன்
வரவுக்காய் வர்க்கித்தல்லவா நிற்கின்றது.
நீ மட்டும் எங்கே போகிறாய்?
மாண்டவர் பூமிக்கா, இல்லை மங்கையர்
பூமிக்கா?
இவை யாவும் உன் வசந்த காலத்தை
வளப்படுத்தி விடுமா?
சற்று நின்று திரும்பிப்பார்!
வரண்டுபோன பூமியை அல்ல - நீ
வந்த இருண்ட பாதையை......
இப்போது உன் பயணத்தையும்
பாதையையும் பக்குவப்படுத்திக்கொண்டு
புறப்படு! போர்வீரனாகவல்ல
புது மனிதனாய்......!

ச. மரிமைதிலி, எழுத்தூர் மன்னார்.

அறிவியல் உலகம்... அறிவியல் உலகம்... அறிவியல் உலகம்... அறிவியல் உலகம்...

# அறிவியல் உண்மைகளைத் தெரிந்து கொள்வோம்?

## தேன் ஏன் கெடுவதில்லை?



தேனீ மலர்களிலிருந்து சேகரிக்கும் தேனை அப்படியே வைத்துக் கொள்வதில்லை. வீட்டுக்குச் செல்லும்போது அதற்கென்றே ஸ்பெஷலாக வயிற்றுக்குள் ஒரு பை வைத்திருக்கிறது. அதில்தான் கொண்டு போகிறது. வயிற்றிலிருந்து அந்தப் பையைப் பிரிக்க குட்டியாக ஒரு வால்வும் இருக்கிறது. சமூகத்துக்கு வேண்டியதை தான் உண்டுவிடாமல் இருக்கத்தான் இந்த வால்வு இந்தப் பையில் உள்ளாகின்றது.

இந்த மாறுதலுக்குப் பின்னரே தேன் கூட்டில் சேகரித்து வைக்கப்படுகின்றது. கூட்டின் சூடும் காற்றோட்டமும் சேர்ந்து கொண்டு தேன் இறுகுகின்றது. அதில் இருக்கும் ஈரம், தண்ணீர் பெரும்பாலும் நீக்கப்பட்டு விடுகின்றது. இந்த விதத்தில் பழுத்து, நீர் நீக்கப்படுவதாலும் இரசாயன வகையில் தேனீயின் வயிற்றில் மாற்றம் ஏற்படுவதாலுமே தேன் நீண்ட நாட்கள் கெடாமல் இருக்கின்றது.

## நாம் பேசும் நேரம்



ஒரு நாளைக்கு ஒரு மனிதன் சராசரி எவ்வளவு சொற்களைப் பேசுகிறான்? 30 ஆயிரம் வார்த்தைகள். நிமிடத்திற்கு 150 சொற்களையும் மணிக்கு 9000 சொற்களையும் பேசுகிறான். மொத்தப் பேச்சைச் சேர்த்தால் ஒரு நாளைக்கு சுமார் நான்கு மணி நேரம் நாம் பேசுகின்றோம்.

## முதலைக் கண்ணீர்



போலியான அனுதாபம் காட்டுவோரை முதலைக் கண்ணீர் வடிக்கிறார்கள் என்போம். இந்த முதலைக் கண்ணீரின் தன்மை என்ன...? இந்தப் பெயர் நயவஞ்சகர்களுக்கு எப்படி ஒப்பிடப்படுகிறது...?

அறிவியல் தரும் விளக்கங்களின்படி முதலையின் கண்களிலிருந்து வெளி வருவது உண்மையான கண்ணீர் அல்ல. மேலும் அது துக்கம் காரணமாகவோ, துன்புறுத்தப்படுவதாலோ எழும் கண்ணீரும் அல்ல. முதலையின் கண்களின் ஓரத்தில் சிறு கழிவு நாளம் உள்ளது. இந்த நாளம் வழியாக முதலையின் உடலில் அதிகப்படியாக உள்ள கழிவு உப்பு சிறு துளிகளாக வெளியேற்றப்படுகிறது. உடலின் உப்புச் சத்தை ஒரே சீராக வைத்துக் கொள்ளவே இந்த நாளம் உதவியாகச் செயற்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியப்பா பதில்கள்

ஒவ்வொரு மன்னாவிலும் பிரசுரிக்கப்படும் கேள்விகளில் அறிவு சார்ந்த ஆக்கபூர்வமான பயனுள்ள கேள்வி ஒன்று பாராட்டுக்குரிய கேள்வியாகத் தெரிவுசெய்யப்படும். எங்கே உங்கள் கேள்விக் கணைகளை அனுப்புங்கள்! (பதிப்பாசிரியர்)

கே. உங்களுக்கு பிடித்த உங்களைச் சிந்திக்க தூண்டிய புதுக்கவிதை வரி ஒன்று சொல்லுங்கள்?

*வாசன், வவுனியா.*

ப. அழகாய் இல்லை. அதனால் அவள் என் தங்கையாகிவிட்டாள்.

கே. இலட்சியமே இல்லாத இளைஞர்களை எதனுடன் ஒப்பிடலாம் ?

*மணிவண்ணன், செட்டிகுளம்.*

ப. தண்டவாளம் இல்லாத ரயிலுடன்.

கே. பெற்றோர் நிச்சயிக்கும் திருமணம் சில ஆண்பிள்ளைகளுக்குப் பிடிப்பதில்லையே?

*மஞ்சுளா , வங்காலை.*

ப. தனயனுக்கு கவர்ச்சியில் கண்,
தகப்பனுக்கு கரன்சியில் கண்.

கே. ஆலயத்திற்கு வரும்போதுகூட அளவுக்கதிகமாக தம்மை அலங்கரிக்கும் பெண்களைப் பற்றி ?

*அருள்சீலன், முருங்கன்.*

ப. ஒரு அழகு நிலயத்தின் வாசலில் இருந்த வாசகம் இப்போது என் ஞாபகத்திற்கு வருகிறது. "இங்கிருந்து வெளியே செல்லும் அழகிகளைப் பார்த்து விசிலடிக்க வேண்டாம். அவள் ஒரு வேளை உன் பாட்டியாக இருக்கலாம்".

கே. அன்பின் பெரியப்பா, திருப்பலியின் மகத்துவம் பல கத்தோலிக்கருக்கு புரியாமல் உள்ளதே என்ன செய்யலாம்?

*அந்தோனி அருளப்பு, இலுப்பைக்கடவை*

ப. உண்மை. அதனால்தான் கைகட்டி, வாய்பொத்தி ஏதோ நடக்கிறது, இதமாய் இருக்கிறது, என்று நாடகம் பார்ப்பது போல திருப்பலியை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். கண்மூடி, கைகுவித்து, செபங்களின் அர்த்தத்தை உணர்ந்து, சத்தமாக சொல்லுகின்ற அனுபவத்திற்குள் நம் மக்கள் வரவில்லை. திருப்பலியின் மகத்துவம் பல கத்தோலிக்கருக்கு புரியாமல் உள்ளது உண்மை என்றால் அதைவிட உண்மை புரியவைக்கப்படாமல் இருப்பதும்தானே?

கே. கடவுள் எங்கு இருக்கிறார் என்ற கேள்விக்கு பலர் பலவாறு விடை கூறுகின்றனர். நீங்கள் என்ன கூறுகின்றீர்கள்?

*ய. சுதர்ஷினி பெனான்டோ, பெரிய பண்டிவிரிச்சான்,*

ப. நான் கூறுகின்றேன் கடவுள் என்னுடைய உங்களுடைய நம் எல்லோருடைய உள்ளத்திலும்தான் இருக்கிறார்.

▣ கே. இவர் வழியாக இவரோடு இவரில் என்கின்ற



புகழ் கீதம், பலி வேளையில் குரு தனித்துச் சொல்வதைவிட, இறைமக்களும் சேர்ந்து சொல்வது பொருத்தமானது அல்லவா?

*ஜெயாபாலாஜி, முருங்கன் .*

ப. இல்லை. இவர் வழியாக.... என்கின்ற புகழ் கீதம் குருவானவர் இதற்கு முன் சொல்லிய செபத்தின் தொடர்ச்சியாகும். எனவே அதை குருவானவர் மட்டுமே சொல்லுவது பொருத்தமாகும். அதைவிட இச்செபத்தின் இறுதியில் மக்களெல்லோரும் சொல்லுகின்ற "ஆமேன்" என்ற வார்த்தையை உணர்ந்து உரத்து சொல்லும்போது இறைமக்கள் அனைவரும் இச்செபத்தில் பங்கேற்று அதை ஆமோதிப்பதாக அமைகிறது. திருவழிபாட்டில் ஒவ்வொருவருக்கும் (குருவானவர் - இறைமக்களுக்கு) ஒவ்வொரு இடம் உண்டு. அதைத் தெரிந்து கொண்டு - புரிந்து கொண்டு பங்கெடுப்போம்.
யாரும் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌவுக்கியமே... ஹி......ஹி..........

கே. எனது முன்பற்கள் ஆடுகின்றன... அதைப் பிடுங்க நல்ல டாக்டரின் விலாசம் ஒன்று தர முடியுமா பெரியப்பா...?

ப. ஏன் வீண்செலவு? யாராவது ஒரு வாட்டசாட்டமான பெண்ணிடம் பல்லைக் காட்டிப் பாருங்கள். தட்டிக் கையிலே தருவாள்.

▣ இந்த அடையாளமிடப்பட்ட கேள்வி பாராட்டுக்குரியதாக தெரிவுசெய்யப்பட்டுள்ளது.



## சிரிக்க... சிந்திக்க...

இங்கே நாம் எங்கே.... ?

## வைரவிழா வாழ்த்து

### வைரவிழாக்காணும் தம்பதிகள



**செபமாலை யாக்கோப் குருஸ், சந்தியா சலேற்றம்மாள் துரம் (பேசாலை)**

**1943 . 10. 09 - 2002. 10. 09**

பேசாலை எம் பதியில் மாபெருங் குடும்பங்களில்
மணம் வீசும் மலர்களாக - மலர்ந்த
எம் பெற்றோரே. உங்களை நாம்
நன்றியுணர்வுடன் வாழ்த்தி போற்றுகிறோம்.
வைர விழா காணுமிந்த இன்ப நாளிலே
அருமைச் செல்வங்களான எட்டினைப் பெற்ற நீங்கள்
எங்களை இப்பதியினில் சீறும் சிறப்புடனும்
வாழ வைத்தீர். உம்மை வாழ்த்துகிறோம்.
அறுபது ஆண்டுகளாய் இல்லறமதில்
இன்பமுடன் காத்த இறைவன்
இன்னும் பல்லாண்டு காக்கவும் வெற்றியன்னை பாதமதில்
வெற்றியுடன் வாழவும் வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்: சகோதரர்கள், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## நீங்காத நினைவுகள்

### விண்ணக வாழ்வில்

**31ம் நாள் நினைவு**



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 05 - 01 - 1959 | 27 - 09 - 2002 |

**யேசுதாசன் மேரி பெர்ணடேற் பீரிஸ்.**

**(ராகினி - வங்காலை)**

கனி இருக்கக் காயை கவர்ந்ததேன்
தியாகத் தீபத்தின் அமைதிச்சுடரே
பகைவரையும் நண்பராக்கும் பசிந்தளிரே,
மாறாத வேதனையிலும் மாதாவை மறவாத மரகதமே,
மகரகம மெத்தையிலும் சித்தமெல்லாம் மரியாயின் சேனை,
அன்பியம், மாதாகூட்டம். என்னம்மா உன் பக்தி!
காலையிலும் மாலையிலும் ஆண்டவன் சந்நிதியிலும் அயலவர் வீட்டிலும், ஓங்கி ஒலித்த உம் ஓங்காரக் குயிலோசையை - இறைவா உன் வீட்டில் இருந்துகொண்டு கேட்பதற்காகவா
கேன்சர் என்ற அவதாரமெடுத்து இங்கு வந்து எம் தீபத்தை உன் தீபமாக ஏந்திச் சென்றாய்.
அணையாத தீபமே உம் அமைதிச்சுடரை
இனி எப்போ காண்போம். இறைவா இரங்குவாய்.

பிரிவால் துயருறும்,
கணவன், பிள்ளைகள், சகோதரர், உறவினார்கள்.

## பிறந்தநாள் வாழ்த்து பற்றிய அறிவித்தல்

உங்கள் மழலைச் செல்வங்களின் பிறந்தநாள் வாழ்த்துக்களை மன்னாவில் பிரசுரம் செய்து மகிழ விருப்பமா? அப்படியானால் நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் இதுதான். எந்த மாதத்தில் இவ்வாழ்த்து இடம்பெற வேண்டும் என விரும்புகிறீர்களோ அந்த மாதத்திற்கு முன்னைய மாதத்தில எமக்கு கிடைக்கக்கூடியவாறு பெயர், தாய் தந்தை பெயர், இடம், பிறந்த திகதி மாதம் ஆண்டு, புகைப்படப் பிரதி, ஆகியவற்றுடன் கட்டணமாக ரூபா 750 யும் எமக்கு அனுப்பி வையுங்கள். தகவல் தருபவரின் பெயர் முகவரியை (தொலைபேசி இருந்தால் அதன் எண்ணையும்) தவறாமல் குறிப்பிடவும். திருமறைப்பணி நிலையத்தில் பணிபுரியும் அருட்சகோதரி லோறன்சியா அவர்களிடம் அலுவலக நேரத்தில் நேரடியாகவும் கையளிக்கலாம். தகவல் தருபவரின் பெயர் முகவரிக்கு புகைப்படப் பிரதிகளை திருப்பி அனுப்பிவைப்போம்.

(பதிப்பாசிரியர்)

## நீங்காத நினைவுகள் பற்றிய அறிவித்தல

நங்காத நினைவுகள் பகுதியில் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவுகளும் இடம்பெற வேண்டும் என விரும்புகிறீர்களா? அப்படியானால் நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் இதுதான். எந்த மாதத்தில் இந்நினைவுகள் இடம்பெற வேண்டும் என விரும்புகிறீர்களோ அந்த மாதத்திற்கு முன்னைய மாதத்தில எமக்கு கிடைக்கக்கூடியவாறு நினைவுக் குறிப்பு, (அதாவது இறந்தவரின் முழுப்பெயர், இடம், பிறந்த திகதி ஆண்டு மாதம், இறந்த திகதி ஆண்டு மாதம், அஞ்சலிக் கவிதை அல்லது வசனம்) புகைப்படப் பிரதி என்பவற்றுடன் கட்டணமாக ரூபா 750 ஆகியவற்றை அனுப்பிவையுங்கள்.
தகவல் தருபவரின் பெயர் முகவரியை (தொலைபேசி இருந்தால் அதன் எண்ணையும்) தவறாமல் குறிப்பிடவும். திருமறைப்பணி நிலையத்தில் பணிபுரியும் அருட்சகோதரி லோறன்சியா அவர்களிடம் அலுவலக நேரத்தில் நேரடியாகவும் கையளிக்கலாம். தகவல் தருபவரின் பெயர் முகவரிக்கு புகைப்படப் பிரதிகளை திருப்பி அனுப்பிவைப்போம். (பதிப்பாசிரியர்)


உங்கள் மிகச் சிறந்த அன்பளிப்பு

**மன்னா**

யாம் பெற்ற இன்பம்
பெறுக இவ்வையகம்!

உங்கள் உறவினர் நண்பர்களுக்கு
மன்னாவை அறிமுகம் செய்யுங்கள்!
உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ உள்ள உங்கள்
உறவினர் நண்பர்களுக்கு நீங்கள் வழங்கக் கூடிய
சிறந்த ஞாபகப் பரிசு மன்னா
நீங்கள் ஆவலோடு படித்து சுவைக்கும் மன்னாவை
தூர இடத்தில் இருக்கும் உங்கள் உறவினர்
நண்பர்களும் படித்து சுவைக்கும்படி செய்யலாமே!

அப்படியாயின் நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் இதுதான். உங்கள் உறவினர் அல்லது நண்பரின் பெயர் முகவரிகளை தெளிவாக எழுதி சந்தாப்பணத்தையும் எமக்கு அனுப்பி வைக்கவும்.

உங்கள் உறவினர் - நண்பரின் வீடு தேடி
மன்னா பறந்து செல்லும்.

உள்நாட்டில் உள்ளவராயின் ஒரு ஆண்டுக்குரிய சந்தாப்பணமாக இலங்கை ரூபா 200யும் வெளிநாட்டில் உள்ளவராயின் ஒரு ஆண்டுக்குரிய சந்தாப்பணமாக இலங்கை ரூபா 1000யும் (10 யூரோ) அனுப்பவும். சந்தாப்பணத்தை அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது காசுக் கட்டளை மூலமாகவோ அல்லது காசோலை மூலமாகவோ அனுப்பலாம்.


காசோலை மூலம் அனுப்புவதாயின்
வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd. Mannar.
பணம்பெறுபவர் பெயர்: the Editor. - MANNA
வங்கிக் கணக்கு இலக்கம் :- S/ A No. 02 - 1678001 - 5



**மன்னா சந்தாதாரர்களே!**

உங்கள் சந்தாக் காலம் முடிவடையும் மாதம்
உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னாவின்
உங்கள் முகவரிக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.
அதைப்பார்த்து உங்கள் சந்தாவை உரிய காலத்தில்
புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

மன்னா தனிப்பிரதிகளுக்கான ஆண்டுச்சந்தா
உள்நாடு - இலங்கை ரூபா 200
வெளிநாடு - இலங்கை ரூபா 1000 (10 யூரோ)


தொடர்புகளுக்கு


| அலுவலக முகவரி | வதிவிட முகவரி |
|---|---|
| பதிப்பாசிரியர், மன்னா திருமறைப்பணி நிலையம், செபஸ்ரியார் வீதி மன்னார். | பதிப்பாசிரியர் மன்னா பங்குப்பணிமனை, புனித லோறன்சியார் ஆலயம், தலைமன்னார். |
| **OFF. ADDRESS** | **RES. ADDRESS** |
| The Editor, MANNA Pastoral Centre, St. Sebestian's Street Mannar, Sri Lanka. | The Editor MANNA Parish House St. Lawrence Church Talaimannar, Sri Lanka. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி - இல. 6

## புனித பவுல் உரோமையருக்கு எழுதிய திருமுகம்

வாசகர்களே மாணவர்களே உங்கள் விவிலிய அறிவை பரீட்சிக்கவும் விவிலியத்தை வாசிக்கத் தூண்டவும் இக்குறுக்கெழுத்துப் போட்டியை தொடர்ச்சியாக நடாத்த திட்டமிட்டுள்ளோம். கீழே உள்ள பெட்டிகளைக் கொண்ட படிவத்தை நீங்களே தயாரித்து வெற்றிடங்களை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். (வெட்டி அனுப்புவதானால் உங்கள் மன்னா பத்திரிகையை பாதுகாத்து வைக்க முடியாமல் இழக்க நேரிடும்) உங்கள் விடைகளை 30. 11. 2002க்கு முன் எமக்கு கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கவும். சரியான விடையை எழுதிய மூன்று அதிஸ்டசாலிகளுக்கு பரிசுத் தொகைகள் அனுப்பி வைக்கப்படும்.




**1ம் பரிசு -ரூபா 250**
**2ம் பரிசு - ரூபா 150**
**3ம் பரிசு - ரூபா 100**

### இடமிருந்து வலம்

1. .................... உனக்கு மிக அருகில் உள்ளது.
6. பேறுபெற்றோர் .................... பெற்றுக்கொண்டோர் மட்டுமா? (இறுதி எழுத்து விடப்பட்டுள்ளது)
8. கடவுளை அவர்கள் அறிந்திருந்தும் கடவுளுக்குரிய மாட்சியை அவர்கள்........................
10. நாம் ........................ இன்றி வலுவற்று இருந்தபோதே குறித்த காலம் வந்ததும் கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார்.
11. கணவன் உயிரோடு இருக்கும்போது ஒரு பெண் வேறொருவருடன் வாழ்ந்தால் ...................... என்னும் பெயர் கிடைக்கும்.
14. இவர் ................ வாய்ந்த ஒரு கிறிஸ்தவர்.

### கீழிருந்து மேல்

8. ஆண்டவரே நாங்கள் ................. நம்பியவர் யார்?
9. ஆம் அவர் ........................ .
13. அவ்வாறே கடவுள் ஒருவருடைய ........................க் கணிக்காமலே அவரைத் தமக்கு ஏற்புடையவர் எனக் கருதுவதால் அம் மனிதர் பேறுபெற்றவர். (இறுதி இரு எழுத்துக்கள் மாறியுள்ளன.)
15. மாறாக அருளின் ........................ உட்பட்டவர்கள். (இறுதி இரு எழுத்துக்கள் மாறியுள்ளன).
16. நாம் ........................ இருந்த போதே கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார்.

### வலமிருந்து இடம்

2. மனவலிமை கொண்டவர்களாகிய நாம் ..................களின் குறைபாடுகளைத் தாங்கிக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறோம்.
3. கடவுள் ......................து தண்டித்தால் அவர் நீதியுள்ளவர் என்போமா?
5. கடவுளின் மாட்சியில் .................... என்னும் எதிர்நோக்கில் நாம் பெரு மகிழ்வும், கொள்ள முடிகிறது.
7. நம் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் வழியாய்க் கடவுளோடு ...................... கொண்டுள்ளோம்.
12. அவர்கள் நடுவில்தான் கடவுள் தம் ......................... விளங்கச் செய்தார்.
15. நீங்கள் கடவுளுக்குக் கீழ்ப்படிந்தால் அவருக்கு ஏற்புடையவர்கள் ...................கள்.
16. ஊனியல்பு கொண்ட மனிதரைப் போன்றவராய்த் தம் சொந்த மகனை அனுப்பி மனிதரிடமுள்ள .......................கு முடிவு கட்டினார்.

### மேலிருந்து கீழ்

1. மூதாதையருக்குத் தரப்பட்ட ...................... உறுதிப்படுத்தவும், பிறஇனத்தார் கடவுளுடைய இரக்கத்தைப் பார்த்து, அவரைப் போற்றி புகழவும் இவ்வாறு தொண்டர் ஆனார்.
2. தம் ஒரே மகனைப் பற்றிய நற்செய்தியை அறிவிக்கும் பணியின் மூலம் நான் உளமார ................. வரும் கடவுள் சாட்சியாய் சொல்லுகின்றேன்.
4. அந்த .................... ஒரு போதும் ஏமாற்றம் தராது.
8. ஆனால் அவர்களுள் சிலர் .....................ளை நம்பவில்லையே?
9. இவ்வாறு ....................... கடவுளுக்கு ஏற்ற பயன் அளிக்க முடியும்.
10. நாம் அனைவரும் அவருடைய சாவிலும் அவரோடு ..................க்கிறோம் என்பது உங்களுக்குத் தெரியாதா?
11. ஏனெனில் இறந்தோர் ................... பெற்று விட்டார்கள்.

**விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி**
**இல. 5ற்கான விடைகளை**
**கார்த்திகை மாத மன்னாவில் எதிர்பாருங்கள.**

---

## விவிலியகுறுக்கெழுத்துப் போட்டி இல. 4ல்

**சரியான விடைகளை அனுப்பியவர்களில்**

## பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்

*முதலாம் பரிசு*
பி. றொசானி றோச்
பள்ளிமுனை.

*இரண்டாம் பரிசு*
மெ. மேரி சுரேக்கா
8ம் வட்டாரம்
பேசாலை.

*மூன்றாம் பரிசு*
திருமதி யசிந்தா
மனோறஞ்சன்
12, ruedes Jons
91230, Montgeron
France.

---

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 58 பேர்
சரியான விடைகளை எழுதியோர் 27 பேர்

**விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி**
**இல. 4ல் சரியான விடைகளை**
**அனுப்பியவர்களில்**

## பாராட்டுப் பெறும் 20 அதிஸ்ரசாலிகள்

1. எஸ். ஜீவ சுலக்சி, அந்தோனியார் புரம், இலுப்பைக் கடவை.
2. ப. பவுளின் செலர், தரம் -13, புனித/தோமஸ் பெண்கள் பாடசாலை, மாத்தளை.
3. எ.டி. பிறேமானந், 'பிறேம்ஸ்ரன்', நெல்லியடி, கரவெட்டி.
4. ஆ. மரியதிரேசா டயஸ், 8ம் வட்டாரம், லூர்து கெபி வீதி பேசாலை.
5. வே.அமலநாயகி ஆவணம், நானாட்டான்.
6. இ. டிலானி சொய்சா, 8ம் வட்டாரம், வங்காலை.
7. ஜே. பெனடிக்ற் மயூரன், இல 97. முதலியார் குளம், செட்டிகுளம்.
8. என்.பி. றோச்(பள்ளிமுனை), இ.போ.சபை காப்பாளர், மன்னார்ச்சாலை.
9. ஆ. உஷா, நறுவிலிக்குளம், வங்காலை.
10. அ. வேளாங்கன்னி றோஸ், பொன்தீவு கண்டல், முருங்கன்.
11. எ.எம். மஞ்சுரிக்கா, பிறேமஸ்ரன் நெல்லியடி, கரவெட்டி.
12. எம். வீணா பெரேரா, பள்ளிமுனை.
13. ரி.ஜெ. சகாயராணி பெர்னாண்டோ, 8ம் வட்டாரம், பேசாலை.
14. அருண் பிரசாத் லெம்பேட், 100 வீட்டுத் திட்டம், அக்னேஸ்புரம், வங்காலை.
15. எ. செலஸ்ரீனா, பொன்தீவுகண்டல், முருங்கன்.
16. யே. சாம்ஷன், யோசவ்வாஸ் நகர், தோட்டவெளி, மன்னாார்.
17. ச. மைதிலி, அளவக்கைப் பங்கு.
18. வெ. கிறிஸ்ரா பீரிஸ், 7ம் வட்டாரம், வங்காலை.
19. பி. கிறிஸ்ரபெல் றோச், ஆண்டு- 7, புனித லூசியா மகாவித்தியாலயம், பள்ளிமுனை.
20. யே. மேரி கொன்சேற்றா, யோசவ்வாஸ் நகர், தோட்டவெளி, மன்னார்.

---

## விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி இல. 4 (யோவான் நற்செய்தி)

### சரியான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. வார்த்தையின்
2. விடுதலை
9. (கு)மண்ணுல
18. வீசினார்கள்
22. ஒளியைக்

**வலமிருந்து இடம்**

5. கல்லறை
6. விளக்கு
8. குடிகொள்வோம்
11. தீயனவா (ய்)
12. இப்பேச்சை
14. இணைந்தே
19. திருவிழா
21. படுக்கையை

**மேலிருந்து கீழ்**

1. வாழ்வும்
. பகர்ந்தீரே
4. வாக்கு
9. மகிழ்ச்சி
10. தெய்வங்கள்
12. இணைந்திருப்
13. மாட்சிப்
14. இருந்தாரே

**கீழிருந்து மேல்**

7. கொலையா(ளி)
12. இயலவில்லை
13. மாற்றுவோரின்
15. மறைநூலும்
16. கடைப்பிடிப்பா(ர்)
17. பேச்சை
20. தேடினார்கள்

---

### செபமாலை ஆண்டும் ......1ம் பக். தொடர்ச்சி

இவ்வாண்டு ஒக்ரோபர் 16ந் திகதி வெளியிடப்பட்ட திருச்செபமாலை பற்றிய தனது அப்போஸ்தலிக்க மடலில் திருத்தந்தை அவர்கள் செபமாலை செபிப்பது சமாதானத்திற்கான மிகச் சிறந்த ஆயுதம் எனக் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

எனவே இந்தச் செபமாலை ஆண்டை மன்னார் மறைமாவட்டம் முக்கியமான ஆண்டாகக் கடைப்பிடிக்க வேண்டும் என மன்னார் ஆயர் அவர்கள் இறைமக்களைக் கேட்டுள்ளார். இது தொடர்பாக ஆயர் அவர்கள் இறைமக்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

1. இன்றைய அரசியல் சூழ்நிலையில் சமாதானத்திற்காக இன்னும் அதிக ஆர்வத்தோடும் உறுதிப்பாட்டோடும் நாம் செபிக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்த விரும்புகிறேன்.
2. மருதமடு அன்னையின் பரிந்துரையால் அரும்பிய சமாதானம் நிறைவடைந்து, சகல மக்களுக்கும் உண்மையான விடுதலை கிடைக்க, திருச்செபமாலையை இவ்வாண்டு ஐப்பசி மாதம் தொடக்கம், 2003 ஐப்பசி வரை குடும்பங்களில் செபிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.
3. இச்செபமாலை ஆண்டில் சனிக்கிழமைதோறும் பங்கில் உள்ள வலயங்கள் ஒன்றுகூடி செபமாலையை செபிக்குமாறும் மாதத்தின் முதல் சனிக்கிழமைகளில் செபமாலைப் பவனி போன்ற பக்தி முயற்சிகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறேன் என இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

### வாழ்வுதயத்தின் ......1ம் பக்கத் தொடர்ச்சி

கலைநிகழ்வுகளில், 100வது கால் பொருத்தப்பெற்ற நபரின் நாதஸ்வரக்கச்சேரி சபையோரை மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைக்க வைத்தது. கலைநிகழ்வுகளில் பங்கு கொண்ட அனைவருமே கால் பொருத்தப் பெற்ற நபர்களென்பது இவ்வைபவத்தின் சிறப்பம்சம் ஆகும்.

தகவல் - அ. அந்தோனிமுத்து வாழ்வுதயம், மன்னார.

---

### தென் ஆசிய நாடுகளின ....12ம் பக்கத் தொடர்ச்சி

திருச்சபையிலும், சமுதாயத்திலும் பெண்களின் பணிகள், பொறுப்புக்கள், கடமைகள் என்னும் தலைப்பு சிந்தனைக்கு எடுக்கப்பட்டது. முக்கியமாக தென் ஆசிய நாடுகளின் பெண்கள் உரிமைகள், ஆன்மீக காரியங்களில் பங்கேற்பு, முழுமையான வாழ்வு, பெண்மையின் தன்மை மதிக்கப்படல் போன்ற பல்வேறு கருத்துக்கள் பற்றி அலசி ஆராயப்பட்டது.

வாழ்க்கையின் அனுபவங்கள், பகிர்வுகள், சிந்தனைகள், பங்கெடுப்புகள் மூலமான பல்வேறு ரகப்பட்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. ஒவ்வொரு நாட்டு அங்கத்தவர்களும் தங்கள் அனுபவங்களைத் தெட்டத் தெளிவாக இரத்தினச் சுருக்கமாக எடுத்தியம்பினர்.

திருச்சபையில் பெண்களின் பணி, பங்கு முதலியன தென் ஆசிய நாடுகளில் பயன்படுத்தப்படவில்லை. அனேக சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாகவே இவர்கள் உள்ளனர். கலாச்சாரம், சமூக மனப்பாங்கு, சமயக் கோட்பாடுகளால் பெண்களுக்கு இடப்பட்ட அடிமை விலங்கு உடைக்கப்பட வேண்டும் என்னும் கருத்துடன் ஒன்று கூடல் முற்றுப்பெற்றது.

---

### கர்தினால் பதவிகளில்........

12ம் பக்கத் தொடர்ச்சி

1996ல் இன்றைய திருத்தந்தையால் உறுதி செய்யப்பட்ட திருத்த விதிகளின்படி, 80 வயதை அடைந்த கருதினால் புதிய திருத்தந்தையைத் தேர்வுசெய்யும் ஆரம்ப ஒன்று கூடலில் பங்கேற்கலாமெனினும் புதிய திருத்தந்தை தெரிவில் வாக்களிக்க முடியாது. திருச்சபை விதிகளின்படி எண்பது வயதான கருதினால் பேணாடினின் பொறுப்புகள் அவரது உதவியாளர் கருதினால் ரட்சிங்கரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இன்று கருதினால் ரட்சிங்கர் திருச்சபையின் விசுவாச அறிக்கைக் குழுவின் முதல்வராவார். திருத்தந்தையால் அங்கீகரிக்கப்படும் முதல்வர் உப முதல்வர்களுக்கான பதவிகள் உரோமையைச் சுற்றியுள்ள ஆலயங்களின் ஆறு கருதினால்களிலிருந்து தெரிவுசெய்யப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னாரில் புதிய ஆண்டுக்கான மேய்ப்புப்பணி மாநாடு

மன்னார் மறைமாவட்ட மேய்ப்புப்பணி மாநாடு 2003 தை மாதம் 18ந் திகதி இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான பூர்வாங்க ஆயத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆண்டும் இடம்பெறும் இம்மாநாட்டில புதிய வருடத்திற்கான மேய்ப்புப்பணித்திட்டங்கள் தீட்டப்பட்டு அவை பங்கு மட்டத்தில் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

## வெட்டாப்பு பத்திரிகையின் 10 ஆண்டு நிறைவு

திருமலை மட்டுநகர் மறைமாவட்டத்தின் மாதாந்தப் பத்திரிகையான வெட்டாப்பு 10 ஆண்டுகளை நிறைவு செய்கிறது. 1992 புரட்டாதி மாதம் ஆரம்பிக்கப்பட்ட இப்பத்திரிகை பல வளர்ச்சிப் படிகளைத் தாண்டி வந்துள்ளது.

மன்னாப் பத்திரிகையின் சகோதரப் பத்திரிகையான வெட்டாப்பின் 10 ஆண்டு நிறைவில் அதன் ஆசிரியர் அருட்பணியாளர் பி. ஜோசப் அடிகளாரையும் அதன் பணியாளர்கள் அனைவரையும் மன்னா பத்திரிகை சார்பாக வாழ்த்துகிறோம்.

உண்ணாவிரதிகளின் அறப்போரை முடிவுக்குக் கொண்டுவருவதில்

# மன்னார் ஆயரின் அதீத முயற்சி வெற்றி!



உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டு வந்த தமிழ் அரசியல் கைதிகளின் உடல் நிலை மிகக் கவலைக்கிடமாகியிருந்த நிலையில் மன்னார் ஆயர் அவர்கள் இவ்விடயத்தில் தலையிட்டு இப்போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவருவதில் தன் முழுமையான பங்களிப்பை வழங்கினார். ஐப்பசி மாதம் முதல் வாரத்தில் களுத்துறை வெலிக்கடை, மட்டக்களப்பு, நியு மகசீன் சிறைச்சாலைகளில் தமிழ் அரசியல் கைதிகள் தமது விடுதலை தொடர்பாக உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர். இந்த அரசியல் கைதிகள் ஆயர் அவர்களுக்கு தங்களின் கோரிக்கை சம்மந்தமாக கடிதம் ஒன்றையும் அனுப்பியிருந்தனர். அதில் தமது உண்ணாவிரதப் போராட்டத்தின் நியாயத்தன்மையை சுட்டிக்காட்டியிருந்தனர். புனர் வாழ்வு அமைச்சர் ஜெயலத் அவர்களுக்கு இது விடயம் தொடர்பாக ஆயர் அவர்கள் அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். சிறைச் சாலைக்கு சென்று கைதிகளை பார்வையிட்ட ஆயர் அவர்கள் அதன் பின்னர் இக்கைதிகளின் உடல் நிலை கவலைக்கிடமாகியதை அடுத்து பிரதமரைச் சந்தித்து நிலைமையின் அவசரத் தன்மையை விளக்கினார். இதையடுத்து பிரதமரின் பணிப்பின்பேரில் அமைச்சர்கள் மிலிந்த மொறகொட, ஜெயலத் ஜெயவர்த்தன ஆகியோர் சிறைச்சாலைக்கு சென்று கைதிகளுக்கு அளித்த வாக்குறுதிகளின் பின்னர் உண்ணாவிரதம் கைவிடப்பட்டது. ஆயர் அவர்களே நீராகாரம் கொடுத்து இவ் உண்ணாவிரதப் போராட்டத்தை முடித்து வைத்தார். ஆயரின் இம்மனிதாபிமான முயற்சி தொடர்பாக பல தேசிய நாழிதழ்கள் ஆயரைப் பாராட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## போரில் உயிர் நீத்தவர்களை நினைவுகூரும் நாள்

மன்னார் மறைமாவட்டத்திலே கடந்த காலப் போரில் உயிர் நீத்தவர்களை நினைத்து அஞ்சலிக்கும் விசேட நாளாக மார்கழி மாதம் 4ந் திகதி நினைவுகூரப்பட உள்ளது. 1984ஆம் ஆண்டு மார்கழி 4ந் திகதி மன்னாரில் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு பல நூற்றுக்கணக்கான அப்பாவி மக்கள் பலியான தினமே இத்தினமாகும். போரில் இறந்தவர்களின் நினைவுகள் மறக்கப்படாதிருக்க ஒவ்வொரு வருடமும் மன்னார் மறைமாவட்டம் இந்த நிகழ்வை உணர்வுபூர்வமாக நடாத்த உள்ளது. இந் நிகழ்வுகள் பங்கு மட்டத்திலும் மறைமாவட்ட மட்டத்திலும் இடம்பெறும்.

## தொடுவானத்தின் 50வது இதழ்

ஜேர்மன் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மீக பணியகத்தின் இரு மாத வெளியீடான தொடுவானம் என்ற பத்திரிகை தனது 50வது இதழை சிறப்பிதழாக வெளியிட்டுள்ளது. தொடுவானம் இதழின் இன்றைய ஆசிரியர் அருட்பணியாளர் றெக்ஷோ அவர்களையும் அவருக்கு வலக்கரமாக இருந்து இவ்விதழை வெளிக்கொணரும் திரு. கபிரியேல் மற்றும் கமிலஸ் ஆகியோரை மன்னா அன்பு நெஞ்சங்களின் சார்பாக வாழ்த்தி நிற்கின்றோம்.



## பல்கலைக்கழக வேந்தராக பேராயர் கோமிஸ்

ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க பல்கலைக்கழகச் சட்டத்தின் 32ம் பகுதியின் கீழ் 1978ம் ஆண்டு 16ம் இலக்கச் சட்டத்தில் தமது அதிகாரங்களைப் பயன்படுத்தி கொழும்பு பேராயர் மேதகு ஒஸ்வோல்ட் கோமிஸ் ஆண்டகையைக் கொழும்பு பல்கலைக்கழகத்தின் வேந்தராக நியமித்துள்ளார். 2002 ஒக்டோபர் 6ம் திகதி முதல் 5 ஆண்டுகளுக்கு இப்பதவியை பேராயர் வகிப்பார். பேராயர் கொழும்பு பல்கலைக்கழக பேரவையின் உறுப்பினராக 1977ம் ஆண்டு முதல் 2001ம் ஆண்டு வரை பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கௌரவப் பேராசிரியராக அமைச்சர் ஜெயலத்



புனர்வாழ்வு அமைச்சர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனாவிற்கு இங்கிலாந்திலுள்ள ஜரிஸ் சர்வதேசப் பல்கலைக்கழகம் கௌரவப் பேராசிரியர் பட்டம் வழங்கி கௌரவித்துள்ளது. இலங்கை மக்களுக்கு குறிப்பாக தமிழ் மக்களுக்கு அவர் பணியாற்றத் துணிந்து நின்றமைக்காகவே இக்கௌரவப் பட்டம் அவருக்கு வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் பிரச்சனையில் விசேட கவனம்கொண்டு தம் உயிரைத் துச்சமென மதித்து வன்னிக்கும், யாழ்ப்பாணத்திற்கும், கிழக்குப் பகுதிக்கும் அடிக்கடி சென்று சமாதானத்தைக் கொண்டுவரவும் சுமுக நிலையை உருவாக்கவும் உழைத்தவர் அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தனா. கத்தோலிக்கரான இவர் தமிழ் மக்கள் மட்டில் கொண்டுள்ள விசேட கரிசனைக்காக மன்னாவின் அன்பு நெஞ்சங்கள் சர்பாக அன்னாருக்கு எமது பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவிக்கின்றோம்.

# கிறிஸ்து இல்லாத உலகம் வெறுமையானது - திருத்தந்தை

உரோமைக்கு அருகிலுள்ள ஓய்வு இல்லத்தில் இருந்த திருத்தந்தை 04.08.2002 அன்று ஞாயிறு மூவேளை ஜெப உரையை வழங்கினார். சமீபத்தில் தனது கனடா, குவாட்டமாலா, மெக்சிக்கோ பயணத்தைப்பற்றி பகிர்ந்த திருத்தந்தை அனைவருக்கும் நன்றியும் கூறினார். மேலும் இந்த உலகை அழகுபடுத்த விரும்பும் ஒவ்வொரு மனிதனுக்கும் அடிப்படையாக இருக்கவேண்டியது மலைப்பொழிவின் பேறுகளாகும் என்றும் இந்த அறநெறிகளை அடிப்படையாக்கும்போது வாழ்க்கையும் உலகமும் அழகாகிறது என்றும் அதையே ரொரண்டோ இளைஞர் விழா உணர்த்தியது என்றும் கூறினார். மேலும் கிறிஸ்து இல்லாத உலகம் ஒன்றுமில்லாத வெறுமையாகிவிடும் என்றும் கிறிஸ்துவோடு இருப்பதுவே நிறைவு என்ற செய்தியை இலட்சக்கணக்கான இளைஞர்கள் ரொரண்டோவிலிருந்து சுமந்து சென்றிருகிறார்கள் என்றும் திருத்தந்தை கூறினார்.

# கருதினால் பதவிகளில் மாற்றம்

## பேராளர் பதவி கர்தினால் ரட்சிங்கரிடம்

மே 8ல் 80 வயதை நிறைவு செய்த கருதினால் பேணடின் கன்ரின் அவர்கள் கருதினால் மன்றத்தின் பேராளர் பதவியினை கருதினால் யோசவ் ரட்சிங்கரிடம் கையளித்தார். கருதினால் மன்றப் பேராளர் பதவி மிகவும் முக்கியம் வாய்ந்தது எனினும் திருத்தந்தையின் பதவி வெற்றிடமாக உள்ள வேளையிலே இவர் பணி அவசியமாகிறது. ஏனைய வேளைகளில் இவர் பதவி வெறும் சடங்குக்குரியதாகவே கருதப்படுகின்றது. திருத்தந்தை மறைவு ஏற்படும் நிலையில், இவரே உலகெங்கும் உள்ள கருதினால்களை உரோமைக்கு அழைத்து திருத்தந்தையின் இறுதிச் சடங்குக்கு தலைமை தாங்குவார். திருத்தந்தை இல்லாத வேளையில் திருச்சபை எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகக் கூடி முடிவெடுக்கக் கருதினால்களின் ஆயத்த ஒன்றுகூடல்களுக்குத் தலைமை தாங்குதல், அவசர வத்திக்கான் செயற்பாடுகளைக் கவனித்தல், அடுத்த திருத்தந்தையின் தேர்வுக்கான கருதினால்களின் ஒன்றுகூடலுக்கு ஆயத்தம் செய்தல் என்பன இவரது பொறுப்புகளாகும்.

## தென் ஆசிய நாடுகளின் பெண்கள் ஒன்று கூடல் மன்னாரில் இருந்து இருவர் பங்கேற்பு

திருச்சபையிலும் சமூகத்திலும் பெண்கள் பங்களிப்பு என்னும் தொனிப் பொருளில் 09.09.2002 தொடக்கம் 14.09.2002 வரை தென் ஆசிய நாடுகளில் உள்ள பெண்களுக்கான ஒன்று கூடல் ஆசிய ஆயர் பேரவையின் அனுசரணையுடன் கொழும்பு றாகம தியான இல்லத்தில் நடைபெற்றது. இந்தியா, பாகிஸ்தான், பங்காளதேஷ், நேபாளம், இலங்கை ஆகிய ஐந்து நாடுகளில் இருந்தும் இந்தியா, பாக்கிஸ்தான், பங்காளதேஷ், மன்னார் ஆயர்கள் உட்பட 45 அங்கத்தவர்கள் இதில் கலந்து கொண்டார்கள். மன்னார் மறைமாவட்டத்தின் சார்பில் சகோதரி நீற்றா குணநாயகம், திருமதி அல்போன்சா பிறேமானந்தன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

# தியாக்கோன் பட்டங்கள்

## மன்னார் மறைமாவட்டத்தில்

மன்னார் மறைமாவட்டத்தைச் சார்ந்த அருட் சகோதரர்கள

1. எஸ். அன்ரன்
2. எஸ். சத்தியராஜா
3. எஸ். எப். பிரான்சிஸ்
4. சுரேந்திரன் றெவல்
5. எம். எ. ஜெயசீலன்

ஆகியோர் ஒக்ரோபர் மாதம் 19ஆம் திகதி புனித செபஸ்தியார் பேராலயத்தில் தியாக்கோன்களாக திருநிலைப்படுத்தப்பட்டனர்.

## அ.ம.திகள் சபையில்

அ.ம.தி. சபையைச் சார்ந்த அருட்சகோதரர்கள்

1. எம். செபமாலை பெரேரா
2. ஜி. ஜே. பிரேம்நாத்
3. ஏ.சி. இன்பநாதன்
4. ஏ.பி. வின்சன்

ஆகியோர் செப்ரெம்பர் மாதம் 19ஆம் திகதி தம் இறுதி வாக்குறுதிகளை அளித்து செப்ரெம்பர் 20ஆம் திகதி தியாக்கோன்களாக திருநிலைப்படுத்தப்பட்டனர்.

## திருவுளச் சபையில்

திருவுளச் சபையைச் சார்ந்த அருட்சகோதரர் அன்ரன் மரியதாஸ் 18.08.2002 இல் நீர்கொழும்பில் தியாக்கோனாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

திருத்தந்தையின் சுற்று மடலின் எதிரொலி

# மரண தண்டனை ரத்து

திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பரின் மனித உயிர் பற்றிய சுற்றுமடல் மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைகிறது என்றும் அதன் கருத்துக்களை மக்கள் இன்று சிந்திக்கத் தொடங்கியுள்ளனர் என்றும் பி. வே. என்ற செய்தி நிறுவனம் கூறியுள்ளது. இன்று மரண தண்டனை அளிப்பதில் பல நாடுகள் தயக்கம் காட்டுகின்றன என்றும் ஏற்கனவே மரண தண்டனைச் சட்டத்தை சில நாடுகள் நிறுத்தி விட்டன என்றும் அச்செய்தி நிறுவனம் கூறியுள்ளது. மேலும் திருத்தந்தையின் வேண்டுகோளையும் அழைப்பையும் உலகம் ஏற்றுக்கொண்டதையே இது காட்டுகின்றது என்றும் பி. வே. செய்திகள் கூறின. இந்த விழிப்புணர்வு மிசன் நாடுகளில் பரவலாகி வருகின்றன.

## பொன் விழாக்காணும் அருட்சகோதரி நசரேத்

புரட்டாதி மாதம் 7ம் திகதி அருட்சகோதரி நசரேத அவர்கள் வேரவில் திருக்குடும்பக் கன்னியர் மடத்திலே தனது துறவற வாழ்வின் ஐம்பது ஆண்டுகளை நிறைவு செய்து மகிழ்ச்சி பொங்க திருப்பலியை ஒப்புக்கொடுத்து இறைவனுக்கு நன்றி கூறினார்.



பங்குத் தந்தை அன்ரன் றொக் அடிகளாரும் வன்னிக்கு பொறுப்பான தி. கு சபை யாழ். மாகாண ஆலோசகர் சகோதரி பொனவெஞ்சர், பொன்விழாவைக் கொண்டாடும் சகோதரி நசரேத் சகோதரி சவரினா, அருட்சகோதரியின் மூத்த சகோதரி ஆகியோர் அமர்ந்திருப்பதையும் வன்னி முல்லை மறைக்கோட்ட குரு முதல்வர் உரைநிகழ்த்துவதையும் காணலாம்.

இப்பத்திரிகை தலைமன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு கொழும்பு கொட்டாஞ்சேனை அச்சகத்தில் அச்சிடப்பட்டு பதிப்பாசிரியரால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org